# சூம் (ZÚME)

சூம் (ZÚME) கையேடு புத்தகம்

# பொருளடக்கம்

வரவேற்கிறோம், 3
S.O.A.P.S. வேத வாசிப்பு, 5
பொறுப்புடைமைக் குழுக்கள், 6
ஜெப சுழற்சி, 9
பட்டியல் 100, 10
தேவனுடைய கதை (சுவிசேஷம்), 15
தேவனுடைய கதை (படைப்பு
முதல் நியாயத்தீர்ப்பு வரை), 15
ஞானஸ்நானம், 17
3-நிமிட சாட்சி, 19
இராப்போஜனம், 20
ஜெப நடை, 22
B.L.E.S.S ஜெபம், 24
3/3 குழுக்கள், 26
பயிற்சி முறை, 29
தலைமைத்துவ குழுக்கள், 32
3-மாத திட்டம், 34
பயிற்சியளிப்பதை சரிபார்க்கும்
பட்டியல், 36
கற்றுக் கொடுக்கும் குழுக்கள், 39
நான்கு கள வரைபடம், 41
தலைமுறை வரைபடத்தில்
எளிய சபையை குறிக்கும் முறை, 42
பின் இணைப்பு, 43

# சூம் (ZÚME) பயிற்சிக்கு வரவேற்கிறோம்!

நீங்கள் வந்திருப்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி!

சூம் (ZÚME) பயிற்சியானது இணையதளம் மற்றும் வாழ்க்கையின் மூலம் கற்கும் அனுபவமாக இருக்கிறது. இது இயேசுவைப் பின்பற்றி அவருடைய சுவிசேஷக் கட்டளைக்குக் கீழ்ப்படியும் சிறிய குழுக்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## பயிற்சி வடிவம்

சூம் (ZÚME) பயிற்சியானது 9 அடிப்படை பயிற்சிகளையும் 1 மேல்நிலை பயிற்சியையும் கொண்டது. [உங்கள் குழு அடிப்படை பயிற்சியை முடித்த பின் மேல் நிலை பயிற்சிக்கு வரலாம்]. ஒவ்வொரு பயிற்சி வகுப்பும் 2 மணி நேரம் நடைபெறும். ஒவ்வொரு வகுப்பிலும் கீழே கொடுக்கப்பட்டவை இடம் பெறும்:

- சீஷர்களைப் பெருகச் செய்வதின் அடிப்படைத் தத்துவத்தை, வீடியோ மற்றும் ஆடியோ மூலம் கற்றுக் கொள்வது.
- கொடுக்கப்பட்ட தலைப்புகளில் சிறு குழுக்களாக பிரிந்து விவாதம் செய்வது
- சிறு பயிற்சிகளின் மூலம் கற்றுக் கொண்டவைகளை அப்பியாசப்படுத்துவது
- சிறு போட்டிகளின் மூலம் உங்கள் குழு கற்றுக் கொள்வதை இன்னும் அதிகமாய் வளர்ப்பது

## அறிமுகம் மற்றும் முடிவு ஜெபம்.

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் அநேகர், உலக முழுவதும் உங்களுக்காகவும், உங்கள் குழுக்களுக்காகவும் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் தொடர்ந்து உங்களுக்காக ஜெபிக்கிறோம். நீங்களும் குழுவாய் ஜெபியுங்கள்.

ஒவ்வொரு வகுப்பு தொடங்கும் முன்பும், பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தை ஆயத்தப் படுத்தும் படியும், வழிநடத்தும் படியும் ஜெபிக்க யாரிடமாவது கேளுங்கள். அவரில் இன்னும் அதிகமாய் அன்பு செலுத்துவதற்குக் கொடுத்த தருணத்திற்காய் நன்றி செலுத்துங்கள் – அதுவே ஒவ்வொருவரிடமிருந்தும் அவர் எதிர்பார்ப்பது.

ஒவ்வொரு வகுப்பின் முடிவிலும் நீங்கள் குழுவாக ஜெபிப்பதற்கு மீண்டும் வாய்ப்பு கொடுக்கப்படும். இந்த வாய்ப்பை பயன்படுத்தி நீங்கள் கற்றுக் கொண்டதைக், கைக்கொள்ளவும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் உதவும் படி தேவனிடம் கேளுங்கள். உங்கள் குழுவில் குறிப்பிட்ட தேவைக்காய் ஜெபிக்க மறவாதேயுங்கள்.

## குழுவாக விவாதம் செய்தல்

நீங்கள் கற்றுக் கொண்டதை உங்கள் குழுவினருடன் பகிர்ந்து கொள்வதற்கு நிறைய வாய்ப்புகள் கொடுக்கப்படும். விவாதங்கள் 10 நிமிடம் மட்டுமே நடைபெற வேண்டும். ஒவ்வொருவரும் தாங்கள் கற்றுக் கொண்டதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு அவர்களுக்கு ஊக்கம் கொடுங்கள். யார் மூலமாவது தேவன் உங்களோடு பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை நழுவ விட்டு விடாதீர்கள்.

## சரிபார்த்தல்

இந்த பயிற்சி முழுவதுமே, நீங்கள் கற்றுக் கொண்டதற்கு எப்படி கீழ்ப்படிகிறீர்கள் என்பதைச் சரிபார்த்துக் கொள்வதற்கு உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். இந்த பகுதியை தவிர்த்து விடாதீர்கள். எவரைப் பற்றியும் கருத்துச் சொல்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். மற்றவர்கள் வளர்வதற்கு உதவி செய்யும் இருதயத்தை தேவனிடம் கேளுங்கள்.

தயாரா? ஆரம்பிக்கலாம்!

# பகுதி 1

இந்த பகுதியிலே உங்கள் குழுவிற்கு, சூம் (ZÚME) பயிற்சி பற்றிய ஒரு பார்வை கிடைக்கும். சீஷர்களை உருவாக்குவதற்கு இரண்டு அடிப்படைச் சூத்திரங்களையும், பெருக்குவதற்கு இரண்டு எளிய வழியையும் கண்டு கொள்வார்கள்.

## S.O.A.P.S. வேத வாசிப்பு

இயேசுவைப் பின்பற்றுபவர்களாகிய நாம் தினமும் வேதம் வாசிக்க வேண்டும். ஒரு வாரத்திற்கு குறைந்தது 25 – 30 அதிகாரங்களாவது படிப்பது ஒரு நல்ல நடைமுறை. S.O.A.P.S வேத வாசிப்பு முறையின் மூலம் நீங்கள் வாசிப்பதிலிருந்து ஒவ்வொரு நாளும் குறிப்பெடுப்பது, நீங்கள் அதிகமாய் அதைப் புரிந்து கொள்ளவும், கீழ்ப்படியவும் அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் உதவும். S..O..A..P.S குறிப்பதாவது

- Scripture (வசனம்): இன்று உங்களுக்கு, அர்த்தத்தைக் கொடுக்கக் கூடிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வசனங்களைப் பற்றிக் குறிப்பெழுதுக
- Observation (கவனித்தல்): அந்த வசனங்களையோ குறிப்புகளையோ இன்னும் அதிகமாக விளங்கிக் கொள்ளும் படியாக, அதை உங்களுக்கு நன்கு புரியும் படி மீண்டும் எழுதுங்கள்
- Application (அப்பியாசப்படுத்துதல்): உங்களுடைய சொந்த வாழ்க்கையிலே அவற்றிற்குக் கீழ்ப்படிவது எவ்வாறு அர்த்தம் நிறைந்ததாக இருக்கும் என யோசித்துப் பாருங்கள்
- Prayer (ஜெபம்): நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்களென்பதையும், எப்படி கீழ்ப்படிய திட்டமிட்டிருக்கிறீர்கள் என்பதைப் பற்றியும் ஜெபமாக எழுதி தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்
- Sharing (பகிர்ந்து கொள்ளுதல்): நீங்கள் கற்றுக் கொண்டதையோ அல்லது கீழ்ப்படிந்ததையோ யாரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரென்று அவரிடம் கேளுங்கள்.

S. O. A. P. S வேலை செய்யும் விதத்திற்கு ஒரு உதாரணம்:

S – "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகள் அல்ல, என்று கர்த்தர் கூறுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்ததாயிருக்கிறது." (ஏசாயா 55:8-9)

**O** – ஒரு மனிதனாக, எனக்குத் தெரிவதும், காரியங்களை எப்படிச் செய்ய வேண்டும் என்று தெரிந்ததும் குறைவே. ஆனால் கடவுளுக்கு எந்த எல்லையுமில்லை. அவர் எல்லாவற்றையும் பார்க்கிறார், செய்கிறார். அவரால் எல்லாம் கூடும்.

A – தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிற படியாலும் அவரது வழிகள் சிறந்ததாய்

இருப்பதாலும், நான் எனக்குத் தெரிந்த வழியில் காரியங்களை செய்வதை காட்டிலும் அவரது வழியில் செய்யும் போது மிகப்பெரிய வெற்றி கிடைக்கும்.

P – கர்த்தாவே, எனக்கு நல்வழியில் வாழ்வது எப்படி, மற்றவர்களுக்கு உதவுவது எப்படி என்று தெரியாது. என் வழிகள் தவறான காரியங்களுக்கு நேராய் என்னை வழிநடத்தும். என்னுடைய எண்ணங்கள் துன்பத்திற்கு நேராய் நடத்தும். உம்முடைய வழிகளையும் எண்ணங்களையும் எனக்குக் கற்பியும். நான் உம்மைப் பின்பற்றுவதற்கு உம்முடைய பரிசுத்த ஆவியானவர் என்னை வழிநடத்துவாராக.

S – நான் இந்த வசனங்களையும், செயல்பாடுகளையும் என் நண்பர் ஸ்டீவுடன் பகிர்ந்து கொள்வேன். அவர் கடினமான காரியங்களினூடே கடந்து சென்று கொண்டிருக்கிறார். அவர் முக்கியமான முடிவுகளை எடுக்க அவருக்கு உதவி தேவை.

## பொறுப்புடைமைக் குழுக்கள்

பொறுப்புடைமைக் குழுக்கள் இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட ஆண் அல்லது பெண்களால் ஆனது, ஆண்கள் ஆண்களுடன், பெண்கள் பெண்களுடன் - வாரம் ஒரு முறை சந்தித்து சரியாகச் செல்லும் காரியங்கள் குறித்தும், திருத்தங்கள் தேவைப்படும் மற்ற பகுதிகளைக் குறித்தும் விவாதிக்க வேண்டும். உங்கள் குழு நேரடியாக சந்திக்க முடியாவிட்டால் தொலைபேசி வழியாக விவாதிக்கலாம். ஒரு பொறுப்புடைமை குழுவில் உள்ள அனைவரும் இந்த விவாதம் ரகசியமானது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்

செயல் முறைகள் [45 நிமிடங்கள்] - ஒரே பாலினத்தவர் கொண்ட இரண்டு அல்லது மூன்று பேர் உள்ள குழுக்களாக பிரிந்து கொள்ளவும். கீழே கொடுக்கப்பட்டுள்ள, பொறுப்புடைமைப் பற்றிய கேள்விகள் குறித்து அடுத்த 45 நிமிடங்கள் விவாதிக்கவும். இந்த அமர்வுக்கு முன் ஒரு குழுவாக சேர்ந்து நீங்கள் வாசிக்கவில்லை என்பதால், முந்தைய பகுதிகளைக் குறித்த கேள்விகளைத் தவிர்த்து விடுங்கள். உங்களுடைய பயிற்சிக்கு பட்டியல்1 மிகச் சிறந்த தேர்வு.

## பொறுப்புடைமைக் கேள்விகள் தொகுப்பு 1

இயேசுவைப் போல மாற ஜெபியுங்கள்

நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? உங்கள் ஜெப வாழ்க்கை எப்படி உள்ளது?

நீங்கள் அறிக்கையிட வேண்டிய பாவம் ஏதாவது இருக்கிறதா? [உறவுகள், பாவ இச்சை, பணம் சம்பந்தமான, பெருமை, நேர்மை, அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல் போன்றவை]

கடந்த முறை தேவன் சொன்ன காரியத்திற்குக் கீழ்ப்படிந்தீர்களா? விவரத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் பட்டியலில் உள்ள விசுவாசி அல்லாதவர்களுக்காக இந்த வாரம் ஜெபித்தீர்களா? அவர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு கிடைத்ததா? அப்படியானால் விவரம் சொல்லவும்.

இந்த வாரம் ஒரு புதிய வசனத்தை மனப்பாடம் செய்தீர்களா? ஆம் எனில் அதைச் சொல்லவும்

இந்த வாரம் வேதத்திலிருந்து குறைந்தது 25 அதிகாரங்கள் படித்தீர்களா?

தேவன், வேதத்தின் மூலம் உங்களுடன் என்ன பேசினார்?

அதைக் குறித்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

இந்த வாரம் 3/3 குழுவுடன் சந்தித்தீர்களா? எப்படி இருந்தது?

3/3 குழுவைத் தொடங்குவதற்கு இந்த வாரம் யாருக்காவது உதவி செய்தீர்களா? அப்படியானால் விவரம் சொல்லவும்.

கிறிஸ்துவுடனான உங்கள் நடைக்கு ஏதாவது தடையாக இருக்கிறதா?

சுவிசேஷத்தைச் சொல்வதற்கு இந்த வாரம் உங்களுக்கு வாய்ப்பு கிடைத்ததா? அப்படியானால் விவரம் சொல்லவும்.

1-3 நிமிடத்திற்கு சாட்சி மற்றும் சுவிசேஷம் சொல்வதைப் பயிற்சி செய்யவும்

அடுத்த வாரம் உங்கள் குழுவிற்கு யாரை அழைக்கப் போகிறீர்கள்? 4 பேருக்கு மேல் இருந்தால் அதைப் பெருகச் செய்யவும்.

நீங்கள் பகிர்ந்து கொண்டதைக் குறித்து ஜெபித்து முடிக்கவும்

## பொறுப்புடைமைக் கேள்விகள் தொகுப்பு 2

கடந்த வாரம் கற்றுக் கொண்டதிலிருந்து உங்கள் சிந்தனையும் வாழ்க்கையும் எவ்வாறு மாறுபட்டிருக்கிறது?

கடந்த வாரத்தில் கற்றுக் கொண்டதை யாருக்குக் கற்றுக் கொடுத்தீர்கள். அதை அவர்கள் எவ்வாறு பெற்றுக் கொண்டனர்?

கடவுள் எப்படி உங்களில் வேலை செய்கிறார்?

உங்களின் வார்த்தைகள் மற்றும் செயல்கள் மூலம், கிறிஸ்துவின் மகத்துவத்திற்காய் யாருக்கு சாட்சியாக இருந்தீர்கள்?

நீங்கள் பாலியல் உணர்வைத் தூண்டும் காரியங்களைப் பார்ப்பதற்குத் தூண்டப்பட்டீர்களா அல்லது உங்கள் மனதை அதற்கு அனுமதித்தீர்களா?

உங்கள் பணத்தை நீங்கள் பயன்படுத்துவதில் கடவுளுடைய உரிமை இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறீர்களா?

நீங்கள் எதையேனும் இச்சித்தீர்களா?

உங்கள் வார்த்தைகளால் ஒருவரின் நற்பெயரை அல்லது உணர்ச்சிகளை நீங்கள் காயப்படுத்தியிருக்கிறீர்களா?

உங்கள் வார்த்தை அல்லது நடவடிக்கை மிகைப்படுத்தப்பட்ட அல்லது நேர்மையற்றதாக இருந்ததா?

நீங்கள் அடிமைத்தனமான [சோம்பேறி அல்லது ஒழுக்கமற்ற] நடத்தையில் அகப்பட்டுக் கொண்டீர்களா?

நீங்கள் ஆடை, நண்பர்கள், வேலை, அல்லது உடைமைகளுக்கு அடிமையாக இருக்கிறீர்களா?

நீங்கள் யாரையாவது மன்னிக்கத் தவறிவிட்டீர்களா?

எப்படிப்பட்ட கவலைகள் அல்லது வருத்தங்களை எதிர்கொள்கிறீர்கள்? நீங்கள் புகார் சொல்லிக் கொண்டோ அல்லது முணுமுணுத்துக் கொண்டோ இருக்கிறீர்களா?

நன்றியுள்ள இருதயத்தை நீங்கள் கொண்டிருக்கிறீர்களா?

உங்கள் முக்கிய உறவுகளில் கௌரவம், புரிதல், மற்றும் தாராளம் இருக்கிறதா?

சிந்தனை, வார்த்தை அல்லது செயலில் என்ன சோதனைகளை எதிர்கொள்கிறீர்கள், நீங்கள் அதற்கு எவ்வாறு பதிலளித்தீர்கள்?

மற்றவர்களுக்கு, குறிப்பாக விசுவாசிகளுக்கு ஆசீர்வதிக்க அல்லது ஆசீர்வதிப்பதற்கான வாய்ப்புகளை நீங்கள் எப்படி எடுத்துக் கொண்டீர்கள்?

பிரார்த்தனைக்கு நீங்கள் குறிப்பிட்ட பதிலைக் கண்டிருக்கிறீர்களா?


இந்த வார வாசிப்பு முடிந்ததா?

## பகுதி 2

இந்த பகுதியில், கடவுளுடைய இராஜ்ஜியத்தில் தயாரிப்பாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்வீர்கள். நீங்கள் சீஷர்களைப் பெருக்குவதற்கு இன்னும் இரண்டு எளிமையான முறைகளைக் கற்றுக்கொள்வீர்கள்.

## ஜெப சுழற்சி

ஜெப சுழற்சி என்பது பிரார்த்தனை செய்ய கற்றுக் கொள்வதற்கு ஒரு எளிய முறையாகும். 12 எளிய வழிமுறைகளில் - ஒவ்வொன்றும் 5 நிமிடங்கள் - ஜெப சுழற்சி இந்த 12 வழிகளை உங்களுக்குப் போதிக்கிறது. இறுதியில், ஒரு மணிநேரத்திற்கு நீங்கள் ஜெபித்திருப்பீர்கள்.




**துதி**: தேவனை துதிப்பதன் மூலம் உங்கள் ஜெப நேரத்தைத் தொடங்கவும். உங்கள் மனதில் இப்போது இருக்கும் விஷயங்களுக்காக அவரைத் துதியுங்கள். கடந்த வாரம் உங்கள் வாழ்க்கையில் அவர் செய்த ஒரு சிறந்த காரியத்திற்காக அவரைத் துதியுங்கள். உங்களுடைய குடும்பத்தாருக்கு அவர் செய்த நன்மைக்காக அவரைத் துதியுங்கள்.

**காத்திரு**: தேவனுக்குக் காத்திருங்கள். மௌனமாக காத்திருங்கள். அவர் உங்களை நடத்தட்டும்.

**அறிக்கையிடு**: உங்கள் வாழ்க்கையில் அவருக்குப் பிடிக்காத காரியங்கள் ஏதாவது இருக்குமாயின் அதைக் காண்பிப்பதற்கு பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள். தவறான

மனோபாவங்களைச் சுட்டிக்காட்டுமாறு அவரிடம் கேளுங்கள், அதே போல் குறிப்பிட்ட செயலுக்காய் இன்னும் அறிக்கைச் செய்யாதிருப்பீர்களேயானால் அதையும் காட்டும் படி கேளுங்கள். நீங்கள் பரிசுத்தமடைவதற்காய், அறிக்கை செய்யுங்கள்.

**வேதத்தை வாசிக்க**: சங்கீதங்கள், தீர்க்கதரிசிகள், மற்றும் புதிய ஏற்பாட்டில் காணப்படும் ஜெபத்தைப் பற்றிய வசனங்களைத் தேடி வாசியுங்கள்.

**கேளுங்கள்**: உங்கள் சார்பாக கோரிக்கை வையுங்கள்.

**போராடுதல்**: மற்றவர்களின் சார்பாக கோரிக்கைகள் வையுங்கள்.

**தேவனுடைய வார்த்தைக்காய் ஜெபம்**: குறிப்பிட்ட பகுதியை வாசித்து ஜெபம். சங்கீத புத்தகம் இதற்கு மிகவும் உதவும்.

**நன்றி செலுத்துங்கள்**: உங்கள் வாழ்க்கையில் நடக்கும் எல்லா காரியங்களுக்கும், உங்கள் குடும்பத்தினர் சார்பாகவும், சபை சார்பாகவும் கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள்

**பாடல்**: ஆராதனைப் பாடல்களையோ, சங்கீதங்களையோ அல்லது கீர்த்தனைகளையோ பாடுங்கள்.

**தியானம்**: உங்களிடம் பேச இறைவனிடம் கேளுங்கள். அவர் அளிக்கக்கூடிய பதிவுகளை ஒரு புத்தகத்தில் எழுதி வைக்கவும்.

**கவனியுங்கள்**: நீங்கள் வாசித்த விஷயங்களையும், ஜெபித்த குறிப்புகளையும், பாடிய பாடல்களையும் ஒன்றிணையுங்கள். ஆண்டவர் உங்களிடம் எப்படி பேசுகிறார் என்பதைப் பார்க்கவும்.

**துதி**: நீங்கள் அவருடன் செலவழித்த நேரத்திற்காகவும், அவர் உங்களுக்குக் கொடுத்திருக்கும். காரியத்திற்காகவும் அவரைத் துதியுங்கள். அவருடைய மகா பெரிய மேன்மைக்காய் அவரைத் துதியுங்கள்.

**செயல் முறை** [60 நிமிடம்] – ஜெப சுழற்சியில் உள்ள வழிமுறைகளைப் பயன்படுத்தி, தனித்தனியாக ஜெபத்தில் அடுத்த 60 நிமிடங்களை செலவிடுங்கள். குழுவிற்கு மீண்டும் திரும்ப ஒன்று சேர நேரம் குறியுங்கள். ஒரு அமைதியான இடத்தைத் தேர்ந்தெடுக்கவும், மீண்டும் குழுவுடன் இணைவதற்கும் சற்று கூடுதல் நிமிடங்களை ஒதுக்கவும்.

## பட்டியல் 100

உங்கள் உறவுகளில் உங்களுக்கு பொறுப்பு இருக்கும் என்று எப்போதாவது நினைத்துப் பார்த்ததுண்டா? கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியல் அதற்கு உதவும்.

கடவுள் ஏற்கனவே நமக்கு போய் சீஷராக்குவதற்கு உறவுகளைக் கொடுத்துள்ளார். அது நம்முடைய குடும்பம், நண்பர்கள், சக பணியாளர்கள் வகுப்புத்தோழர்கள் - நம் வாழ்வில் நாம் அறிந்த மக்கள். இது முதற்படி. அது இப்படிப்பட்ட ஒரு பட்டியலிடுவதின் மூலம்

தொடங்க முடியும்.

**செயல்கள்** [30 நிமிடம்] - உங்கள் குழுவில் உள்ள அனைவருக்கும் 100 படிவங்களின் பட்டியலைப் பயன்படுத்தி ஒரு பட்டியல் தயாரிக்க அடுத்த 30 நிமிடங்களை எடுத்துக் கொள்ள சொல்லுங்கள். ஒவ்வொரு வரிசையிலும், அவர் பெயரை எழுதி, அந்த நபரின் ஆவிக்குரிய நிலை, "சீஷர்" (ஏற்கனவே இயேசுவைப் பின்பற்றுகிறவர்), "அவிசுவாசி [இயேசுவைப் பின்பற்றுகிறவர் அல்ல], அல்லது "தெரியாது" என குறிப்பிடவும்.

தங்கள் பட்டியலை நிறைவு செய்வதற்கு யாருக்காவது நேரம் இல்லாமல் இருந்தால், அவர்கள் பின்னர் அதை நிறைவு செய்யலாம்.

**நினைவில் கொள்ளுங்கள்** - உங்கள் பட்டியலில் உள்ள 100 நபர்களை நீங்கள் எப்படித் தொடர்பு கொள்ள வேண்டும் என்று உங்களுக்குத் தெரியும், உங்களுடன் அவர்களுக்குத் தொடர்ச்சியான அல்லது நீண்ட கால இணைப்பு உள்ளது.

## பட்டியல் 100

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஜான் டோ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ■ தெரியவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 2. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 3. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 4. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 5. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 6. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 7. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 8. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 9. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 10. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 11. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 12. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 13. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 14. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 15. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 16. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 17. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 18. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 19. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 20. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 21. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 22. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 23. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 24. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 25. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 26. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 27. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 28. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 29. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 30. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |
| 31. | ______ | ☐ சீஷன் | ☐ அவிசுவாசி | ☐ தெரியவில்லை |

32. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
33. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
34. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
35. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
36. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
37. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
38. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
39. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
40. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
41. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
42. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
43. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
44. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
45. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
46. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
47. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
48. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
49. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
50. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
51. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
52. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
53. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
54. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
55. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
56. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
57. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
58. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
59. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
60. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
61. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
62. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
63. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
64. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை
65. ____________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

66. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

67. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

68. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

69. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

70. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

71. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

72. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

73. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

74. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

75. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

76. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

77. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

78. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

79. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

80. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

81. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

82. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

83. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

84. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

85. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

86. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

87. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

88. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

89. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

90. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

91. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

92. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

93. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

94. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

95. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

96. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

97. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

98. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

99. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

100. ______________________ ☐ சீஷன் ☐ அவிசுவாசி ☐ தெரியவில்லை

## பகுதி 3

இந்த அமர்வில், நாம் கடவுளின் ஆவிக்குரிய பொருளாதாரம் எவ்வாறு வேலை செய்கிறதென்பதையும், அதை வைத்திருப்பவரிடம் கடவுள் எவ்வாறு அதிகமாய் முதலீடு செய்கிறார் என்பதையும் நாம் கற்றுக்கொள்கிறோம். இன்னும் இரண்டு முறைகளைக் கற்றுக் கொடுக்கிறோம் – சீஷராக்குவதற்கும் – உலகம் உண்டாக்கப்பட்டது முதல் நியாயத்தீர்ப்பு மற்றும் ஞானஸ்நானம் வரையான கடவுளுடைய கதையைப் பகிர்ந்துகொள்வதற்கும்.

## தேவனுடைய கதை (சுவிசேஷம்)

இயேசு சொன்னார்: பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

இயேசு தம் சீஷர்கள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்., அவருடைய கதையை சொல்ல அவர்களை நம்பினார். பிறகு அவர்களை உலகம் முழுவதற்கும் அனுப்பினார். இப்போது, அவர் நம்மை அனுப்புகிறார்.

கடவுளின் கதையை [சுவிசேஷம் என அழைக்கப்படுவது] சொல்லுவதற்கு ஒரே ஒரு "சிறந்த வழி என்றில்லை, ஏனென்றால் சிறந்த வழி என்பது நீங்கள் யாரிடம் பகிர்ந்துகொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. ஒவ்வொரு சீஷனும் கடவுளுடைய கதையைச் சொல்வதற்கு, வேத வசனத்திற்கேற்ற ஒரு வழியைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

## தேவனுடைய கதை (படைப்பு முதல் நியாயத்தீர்ப்பு வரை)

கடவுளைப் பற்றி சொல்ல ஒரு சிறந்த வழி, படைப்பு முதல் நியாயத்தீர்ப்பு வரையான கதையைச் சொல்வதாகும் - கடவுள் எப்படி மனிதனை படைத்தார் என்பதிலிருந்து எப்படி நியாயந்தீர்க்கப்போகிறார் என்பது வரை.

இப்படி நாம் சுவிசேஷத்தைச் சொல்லும் போது அது நீளமாகவோ அல்லது சிறியதாகவோ இருக்கலாம், ஆனால் அது கேட்பவரின் பிண்ணனியுடன் இணைந்து இருக்க வேண்டும்.

குறிப்பு - பல்வேறு கலாச்சாரம் மற்றும் உலக பார்வை உள்ளவர்களிடம் நீங்கள் கைகளை அசைத்து சொல்லலாம், சொல்லிக் கொடுக்கலாம்.

இங்கே அந்த நற்செய்தி –

"ஆதியிலே தேவன் இந்த உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் படைத்தார். அவர்

முதல் ஆணையும் பெண்ணையும் படைத்தார். அவர் அவர்களை ஒரு அழகான தோட்டத்தில் வைத்தார். அவர் அவர்களைத் தனது குடும்பத்தின் அங்கமாக ஆக்கினார்,

அவர்களுடன் நெருக்கமான உறவு வைத்திருந்தார். அவர்கள் எப்பொழுதும் உயிருடன் இருக்கும் படியாகவே படைத்தார். இறப்பு என்ற விஷயம் இல்லவே இல்லை."

"இப்படிப்பட்ட இந்தப் பரிபூரணமான இடத்தில் கூட, மனிதன் கடவுளுக்கு விரோதமாக பாவம் செய்து வேதனையை இந்த உலகத்திற்கு கொண்டு வந்தான். தேவன் மனிதனை தோட்டத்திலிருந்து விரட்டியடித்தார். மனிதனுக்கும் தேவனுக்கும் இடையேயான உறவு முறியடிக்கப்பட்டது. இப்போது மனிதன் மரணத்தை எதிர்கொள்ள வேண்டும்"

"நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக, தேவன் தீர்க்கதரிசிகளை உலகிற்கு அனுப்பிக் கொண்டிருந்தார். அவர்கள் பாவத்தை மனிதனுக்கு உணர்த்தி வந்தார்கள் அதே சமயம் இந்த உலகிற்கு ஒரு இரட்சரை அனுப்பும் வாக்குத்தத்தையும் நினைவுபடுத்தி வந்தார்கள். அந்த இரட்சகர் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள நெருங்கிய உறவை மீண்டும் கொண்டு வருவார். அந்த இரட்சகர் மரணத்திலிருந்து மனிதனை உயிர்ப்பிப்பார். இரட்சகர் நித்திய ஜீவனை அளிப்பார் அவர்களுடன் எப்போதும் இருப்பார்.

"தேவன் நம்மை மிகவும் நேசிக்கிறார், சரியான நேரத்தின் போது, தம்முடைய குமாரனை இரட்சகராக உலகிற்கு அனுப்பினார்

"இயேசு கடவுளுடைய குமாரன். அவர் ஒரு கன்னிகை மூலம் உலகத்தில் பிறந்தார். அவர் ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்தார். அவர் பாவம் செய்ததில்லை. இயேசு கடவுளைப் பற்றி மக்களுக்குக் கற்பித்தார். அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தும் பல அற்புதங்களைச் செய்தார். அவர் பல பேய்களை விரட்டினார். அவர் பல மக்களை குணப்படுத்தினார். அவர் குருடர்களைப் பார்வையடையச் செய்தார். செவிடர்களைக் கேட்க செய்தார். முடவர்களை நடக்கச் செய்தார். இயேசு இறந்தவர்களைக் கூட எழுப்பினார்.

"அநேக மதத் தலைவர்கள் இயேசுவை மிரட்டினார்கள் அவர் மீது பொறாமை அடைந்தார்கள். அவர்கள் அவரைக் கொல்ல விரும்பினர். அவர் ஒருபோதும் பாவம் செய்ததில்லை. இயேசு இறக்க வேண்டியதில்லை. ஆனால் அவர் நமக்காய் மரிப்பதைத் தெரிந்தெடுத்தார். அவரது வேதனையான மரணம் மனிதனின் பாவங்களை மூடி மறைத்தது. அதன் பிறகு, இயேசு ஒரு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார்

தேவன் இயேசுவின் விலையேறப்பட்ட தியாகத்தைக் கண்டார், அதை ஏற்றுக் கொண்டதை,

மூன்றாம் நாளில் இயேசுவை உயிர்த்தெழுவிப்பதன் மூலம் காட்டினார்.

மரித்தோரிலிருந்தே இயேசுவை எழுப்பினார் என்றும் அவர் நம்முடைய ஆண்டவர் என்றும் நாம் நம்பினால் நாம் இரட்சிக்கப்படுவோம். நாம் வாழும் பாவ வழிகளை விட்டு விலகி, இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்று, நம்முடைய பழைய வாழ்க்கைக்கு செத்து புதிய வாழ்க்கையில் அவர் எழுந்தது போல எழுப்பப்பட வேண்டும். கடவுள் நம் பாவங்களை மன்னித்து நாம் அவரைப் பின்தொடரவும் அவருடைய குடும்பத்திற்குள் வரவும் நமக்குள் வாழ்வதற்காக பரிசுத்த ஆவியானவரை அனுப்பி வைத்திருக்கிறார்.

"இயேசு மரித்தோரிலிருந்து எழுந்த பிறகு, அவர் பூமியில் 40 நாட்கள் வாழ்ந்தார். உலகெங்கும் எல்லா இடங்களுக்கும் சென்று அனைவருக்கும் அவருடைய இரட்சிப்பின்

நற்செய்தியை அறிவிக்க தம் சீஷர்களுக்கு இயேசு கற்றுக் கொடுத்தார்

"இயேசு சொன்னார் - ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

"ஒரு நாள், இயேசு மீண்டும் அப்படியே வருவார். அவரை நேசிக்காதவர்களையும் அவருக்குக் கீழ்ப்படியாதவர்களையும் தண்டிப்பார். அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரை நேசிப்பவர்களுக்கும் அவர் பதில் செய்வார். புதிய வானத்திலும், புதிய பூமியிலும் நாம் எப்போதும் அவருடன் வாழ்வோம்.

"என் பாவங்களுக்காக இயேசு பலியாய் மரித்ததை நான் நம்புகிறேன். அவர் என்னைக் கழுவி என்னைத் தம் குடும்பத்தின் அங்கமாக சேர்த்துக் கொண்டார். அவர் என்னை நேசிக்கிறார், நானும் அவரை நேசிக்கிறேன். அவரது பேரரசில் எப்போதும் அவருடன் வாழ்வேன்.

"கடவுள் உன்னை நேசிக்கிறார், நீயும் இந்த பரிசைப் பெற விரும்புகிறார். இப்போது அதைப் பெற விரும்புகிறீர்களா?

**செயல் முறைகள்** [45 நிமிடம்] - இரண்டு அல்லது மூன்று குழுக்களாக பிரிந்து, அடுத்த 45 நிமிடங்களுக்கு கடவுளுடைய கதையைச் சொல்லிப் பழக நேரம் செலவிடுங்கள். 100 பேர் குறிக்கப்பட்ட உங்கள் பட்டியலில் இருந்து 5 நபர்களைத் தேர்வுசெய்க. ஒரு குறிப்பிட்ட நபரைத் தேர்வு செய்து அவரிடம் நீங்கள் நினைக்கும் விதத்தில் கடவுளின் கதையைச் சொல்ல பயிற்சி எடுங்கள்.

படைப்பிலிருந்து நியாயத்தீர்ப்பு வரையான கதையையோ அல்லது இந்த விதத்தில் கூறினால் கிரியை செய்யும் என்று நீங்கள் நினைக்கும் வண்ணமோ அவருடைய கதையைச் சொல்லுங்கள். நீங்கள் சொல்லி பயிற்சி பெற்ற பின், மற்ற குழுவுடன் கேட்பவராக இணைந்து கொள்ளுங்கள். இதை எல்லாம் செய்து முடிக்கும் பொழுது நீங்கள் அவருடைய கதையைச் சொல்வதற்குத் தயாராய் இருப்பீர்கள்.

## ஞானஸ்நானம்

இயேசு சொன்னார் - நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து...

ஞானஸ்நானம் கிரேக்கம் மொழியில் Baptizo என்று அழைக்கப்படுகிறது. அதற்கு அர்த்தம். எப்படி ஒரு துணிக்கு சாயம் போடும் போது, அதை சாயம் உள்ள நீரில் முக்கி எடுக்கும் போது அது நிறம் மாறி வருகிறதோ அதே போல நாம் தண்ணீரில் மூழ்கி எழும் போது, நாம் மாற்றம் பெறுகிறோம். ஞானஸ்நானம் என்பது நம்முடைய புதிய வாழ்க்கையைக் காட்டுகிறது. இயேசுவின் உருவத்தில் தோய்ந்த நம்முடைய புதிய வாழ்க்கை, அவருக்கு

கீழ்ப்படிந்ததால் மாற்றியமைக்கப்பட்ட வாழ்க்கை. நம்முடைய பாவங்களுக்காக இயேசு மரித்ததைப் போலவே, நாமும் மரித்தது போன்ற படம். இயேசு அடக்கம் செய்யப்பட்டபடியே, நமது பழைய வாழ்க்கைக்கு நாம் அடக்கம் செய்யப்படுகிறோம். இயேசு உயிர்த்தெழுந்ததைப் போலவே நாமும் உயிர்த்தெழுந்து கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்க்கையைப் பெற்றிருக்கிறோம்.

நீங்கள் முன்பு யாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்காமல் இருந்தால், அது அச்சுறுத்தலாக தோன்றலாம், ஆனால் அது அப்படியல்ல. இங்கே சில எளிய வழிமுறைகள்:

1. புதிய சீஷரை மூழ்கச் செய்யும் அளவு ஆழமான தண்ணீர் உள்ள ஒரு இடத்தைத் தேர்வு செய்யுங்கள். இது ஒரு குளம், ஆறு, ஏரி அல்லது கடலாக இருக்கலாம். அது ஒரு குளியல் தொட்டியாகக் கூட இருக்கலாம்.

2. சீஷர் உங்களின் ஒரு கைகயைப் பிடித்துக் கொள்ளட்டும் மற்றொன்றைத் தாங்கிப் பிடித்துக் கொள்ளுங்கள்.

3. தங்கள் முடிவைப் புரிந்து கொண்டு உறுதிப்படுத்துவதற்காக இந்த இரண்டு கேள்விகளைக் கேளுங்கள்.

   "நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டீர்களா?"

   உங்கள் வாழ்நாள் முழுவதும் அவரை ராஜாவாக ஏற்றுக் கொண்டு அவருக்கு பயந்து வாழ்வீர்களா"

4. இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதில் ஆம் என்றால், இப்படி சொல்லுங்கள்:

   "நீங்கள் கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்கிற படியினால், இப்பொழுது உமக்கு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானங்கொடுக்கிறேன்"

5. தண்ணீருக்குள் அவர்களை மூழ்கடித்து, மீண்டும் உயர்த்துங்கள்.

வாழ்த்துக்கள்! பரலோகத்தின் புதிய குடிமகன் - இயேசுவைப் பின்பற்றும் ஒரு புதிய சீஷர் - ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுத்தீர்கள்! இது கொண்டாட வேண்டிய நேரம்!

**முக்கிய குறிப்பு** – பகுதி 4-ல் நீங்கள் தேவனுடைய பந்தியைக் கொண்டாடுவீர்கள். அதற்குத் தேவையான பொருட்களை நினைவில் கொள்ளுங்கள்.[அப்பம் மற்றும் திராட்சை ரசம்]

## பகுதி 4

இந்த பகுதியில், நீங்கள் பெருகுவதற்காய் தேவன் வைத்திருக்கும் திட்டம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள். அவரை உண்மையாய் தொடரும் பலரும் சிறிய இடங்களில் இருந்து வந்திருப்பதைக் கண்டறிவீர்கள். கதை சொல்வது போல் மற்றவர்களை கடவுளுடைய குடும்பத்திற்குள் அழைக்கும் ஒரு முறையையும் கற்று கொள்வீர்கள்.

### 3-நிமிட சாட்சி

இயேசு தம் சீஷர்களிடம் சொன்னார் - நீங்கள் இவைகளுக்கு சாட்சிகள்.

இயேசுவின் சீஷர்களாகிய, நாமும் "சாட்சிகள்", நம்முடைய வாழ்க்கையில் இயேசு ஏற்படுத்திய மாற்றத்திற்கு "சாட்சி". நம் வாழ்வில். கடவுளோடு நீங்கள் கொண்டுள்ள உறவே உங்கள் கதை. நம் எல்லோருக்கும் ஒரு கதை உண்டு. உங்கள் சாட்சியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதின் மூலம் உங்கள் கதையை மற்றவர்களுக்கு சொல்வதற்குப் பயிற்சி செய்கிறீர்கள்.

உங்கள் கதையை வடிவமைக்க பல வழிகள் உள்ளன, ஆனால் இங்கே பயன்பாட்டில் உள்ள சில சிறந்த வழிகள்:

- **ஒரு எளிமையான அறிக்கை** - நீங்கள் ஏன் இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறீர்கள் என்பதைப் பகிர்ந்து கொள்ளலாம். இது ஒரு புதிய விசுவாசியின் மத்தியில் நன்றாக வேலை செய்கிறது.
- **முன்னும் பின்னுமாக** - உங்கள் "முன்" மற்றும் "பின்புற" கதையைப் பகிர்ந்து கொள்ளலாம் -உங்கள் வாழ்க்கை இயேசுவை அறிவதற்கு முன்னும் பின்னும் எவ்வாறு இருக்கிறது என்பதை பகிர்ந்து கொள்ளலாம். எளிய மற்றும் சக்திவாய்ந்த முறை.
- **அதனுடன் மற்றும் இல்லாமல்** - உங்களுடைய கதையுடன் அல்லது இல்லாமல் பகிர்ந்து கொள்ளலாம். இயேசு உங்கள் வாழ்க்கையில் இருந்தால் எப்படி இருக்கிறது, இல்லாமல் இருந்தால் எப்படி இருக்கும் என்பதைப் பகிர்ந்து கொள்ளலாம். நீங்கள் இளம் வயதிலேயே விசுவாசத்திற்குள் வந்திருப்பீர்களானால் உங்கள் கதை இன்னும் நன்றாக வேலை செய்யும்.

உங்கள் கதையைப் பகிர்ந்து கொள்ளும் போது, அது மூன்று பகுதியாக செய்யும் செயல்முறை என்பதை அறிந்திருங்கள்:

- **அவர்களின் கதை** - நீங்கள் பேசும் நபரிடம் அவர்களின் ஆவிக்குரிய பயணம் பற்றிப் பகிர்ந்து கொள்ள கேளுங்கள்
- **உங்கள் கதை** - பின்னர் உங்கள் சாட்சியை அவர்கள் அனுபவத்தைச் சுற்றி பகிர்ந்து

கொள்ளுங்கள்.

- **கடவுளின் கதை** - கடைசியாக, கடவுளுடைய கதையை, உலகின் பார்வை, மதிப்பு மற்றும் முன்னுரிமைகள் இணைந்த விதத்தில் பகிர்ந்து கொள்ளுங்கள்

உங்கள் சாட்சி தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக மிக நீளமாகவோ அல்லது பல விவரங்கள் உடையதாகவோ இருக்க வேண்டியதில்லை. உண்மையில், அது 3-நிமிடங்களுக்குள் இருக்குமானால், கேள்விகளுக்கும், ஆழமான உரையாடலுக்கும் நேரம் கிடைக்கும்.

எப்படித் தொடங்குவது என்பது பற்றிக் கவலைப்படுவீர்களானால் - அதை எளிமையாக வைத்துக் கொள்ளுங்கள். கடவுள் உங்கள் கதையைப் பலரின் வாழ்க்கையை மாற்றுவதற்கு பயன்படுத்த முடியும். , ஆனால் நினைவில் கொள்ளுங்கள் – நீங்கள்தான் அதை சொல்பவர்.

**செயல் முறைகள்** [45 நிமிடம்] - இரண்டு அல்லது மூன்று குழுக்களாக பிரிந்து அடுத்த 45 நிமிடங்களுக்கு உங்கள் சாட்சியைப் பகிர்ந்து கொள்ளுவதைப் பயிற்சி செய்யுங்கள். நம்பாதவர்" அல்லது "தெரியாதவர்" என நீங்கள் குறிப்பிட்டுள்ள உங்கள் 100 பேர் பட்டியலில் இருந்து 5 பேரைத் தேர்வுசெய்க. "உங்களில் ஒருவரை அந்த 5 பேரில் ஒருவராக எடுத்துக் கொண்டு, அந்த நபரிடம் அவருக்கு உதவும் விதத்தில் உங்கள் சாட்சியைக் கூறவும்.

மேலே குறிப்பிடப்பட்ட விரிவான வடிவங்களையோ அல்லது நீங்கள் நன்றாக வேலை செய்யும் என்று நினைக்கும் வேறு எந்த வழியையும் பயன்படுத்தலாம். அதன் பின்பு நீங்கள் மற்றொருவருக்கு அந்த 5 பேரில் ஒருவராக மாறவும். நீங்கள் இந்த பயிற்சியை முடிக்கும் போது உங்கள் சாட்சியை 3 நிமிடங்களிலோ அல்லது அதற்கும் குறைவான நேரத்திலோ சொல்ல முடியும்.

## இராப்போஜனம்

**இயேசு சொன்னார்:** நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்.

இராப்போஜனம், நாம் இயேசுவுடன் கொண்டிருக்கும் நெருங்கிய தொடர்பைக் கொண்டாடுவதற்கு ஒரு வழியாகும். இங்கே அதை கொண்டாட ஒரு எளிய வழி -

நீங்கள் கூடி வரும் போது, அமைதியாக சிறிது நேரத்தை தியானத்தில் செலவிடுங்கள், உங்கள் பாவங்களை மன்னிக்க ஆண்டவரிடம் கேளுங்கள். பின்பு கீழே உள்ள வேத பகுதியை ஒருவரை வாசிக்கச் சொல்லுங்கள்

> நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய

> சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.
>
> 1 கொரிந்தியர் 11:23-24

உங்கள் குழுவிற்காக நீங்கள் ஒதுக்கி வைத்திருக்கிற அப்பத்தை எடுத்து, சாப்பிடுங்கள். வாசிப்பதைத் தொடரவும் –

> போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.
>
> 1 கொரிந்தியர் 11:25

உங்கள் குழுவிற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட பழச்சாறைப் பகிர்ந்துகொள்ளுங்கள். வாசித்து முடிக்க –

> ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.
>
> 1 கொரிந்தியர் 11:26

பிரார்த்தனை மற்றும் பாடல்: தேவனை ஆராதியுங்கள். இராப்போஜனத்தில் பங்கு பெற்றீர்கள். நீங்கள் அவருடையவர்கள், அவர் உங்களுடையவர்.

**செயல் முறைகள்** [10 நிமிடம்] - அடுத்த 10 நிமிடங்களை இராப்போஜனத்தில் செலவிடுங்கள்.

## பகுதி 5

இந்த பகுதியில், ஜெப நடையானது எப்படி உங்கள் பகுதியைக் கிறிஸ்துவுக்காய் பயன் படுத்தும் ஒரு வல்லமையான கருவியாய் இருக்கிறது என்பதைக் கற்றுக் கொள்வீர்கள். மேலும் ஒரு வல்லமையான ஜெபத்தின் மூலம் எப்படி புதிய சீஷர்களை உருவாக்குவது என்பதையும் கற்றுக் கொள்வீர்கள்.

## ஜெப நடை

கடவுளுடைய வார்த்தை சொல்லுகிறது நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும். நாம் எல்லா பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும் படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.

ஜெப நடையானது மற்றவர்களுக்காக ஜெபம் செய்ய வேண்டும் என்ற கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்கு ஒரு எளிய வழியாகும். அது என்ன - நடந்து கொண்டே ஜெபிப்பதாகும். நம்முடைய கண்களை மூடுவதற்கும், தலை குனிந்திருப்பதற்கும் பதிலாக , கண்களைத் திறந்து, நம்மைச் சுற்றிலும் காணும் தேவைகளை நம் மனதில் கொண்டு, கடவுளின் இடைபடுதலுக்காக ஜெபிப்பதாகும்.

நீங்கள் இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட சிறிய குழுக்களாக இந்த ஜெப நடையில் பங்கேற்கலாம் அல்லது தனியாகவும் செய்யலாம்.

நீங்கள் ஒரு குழுவாக சென்றால் - உரத்த குரலில் ஜெபம் செய்யுங்கள், கடவுள் உங்களுடைய இருதயத்தில் கொண்டு வரும் தேவைகளுக்காய் தேவனுடன் ஒரு உரையாடுங்கள். நீங்கள் தனியாக செல்லும் போது அமைதியாக ஜெபம் செய்யுங்கள் அல்லது வழியில் யாரையாவது சந்தித்து அவர்களுடன் ஜெபம் செய்யும் போது சத்தமாக ஜெபம் செய்யுங்கள்.

அப்படி நீங்கள் ஜெப நடை செல்லும் போது ஜெபிக்க வேண்டிய நான்கு காரியங்கள்:

**கவனிக்க** - நீங்கள் என்ன பார்க்கிறீர்கள்? ஒரு பொம்மையை வீட்டின் முற்றத்தில் பார்த்தால், நீங்கள் அக்கம் பக்கத்திலுள்ள பிள்ளைகளுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், அப்பகுதியில் உள்ள பள்ளிகளுக்காகவும் ஜெபம் செய்யலாம்

**ஆராய்ச்சி** - உங்களுக்கு என்ன தெரியும்? அக்கம் பக்கம் பற்றி நீங்கள் பத்திரிக்கையில் வாசித்திருந்தால், அங்கு வாழும் மக்களைப் பற்றி ஏதாவது தெரிந்திருக்கலாம், அல்லது அந்த பகுதியில் குற்றம் அல்லது அநீதி நிறைந்திருக்கலாம். அதற்காய் செயல்பட கடவுளிடம் கேளுங்கள்.

**வெளிப்படுத்துதல்** - பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தில் ஒரு குறிப்பிட்ட

தேவையையோ அல்லது ஜெபத்தின் ஒரு பகுதியையோ கொண்டு வரலாம். கவனித்து அதற்காய் ஜெபம் செய்யவும்.

**வசனம்** - கடவுளுடைய வார்த்தையின் ஒரு பகுதியை உங்கள் ஜெப நடைக்கு முன்பு நீங்கள் வாசித்திருக்கலாம். பின் நீங்கள் நடக்கும்போது பரிசுத்த ஆவியானவர் ஒரு வசனத்தை உங்கள் மனதில் கொண்டு வரலாம். அந்தப் பகுதி எப்படி சுற்றியுள்ளவர்களை பாதிக்கும் என்பதற்காக ஜெபியுங்கள்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து காரியங்களில் உங்கள் ஜெப நடையின் போது கவனம் செலுத்தலாம்.

**அரசாங்கம்** - அரசாங்க மையங்கள், நீதிமன்றங்கள், கமிஷன் கட்டிடங்கள் அல்லது சட்ட அமலாக்க அலுவலகங்கள் ஆகியவற்றுக்காக ஜெபியுங்கள். அந்த பகுதியின் பாதுகாப்பிற்காகவும், நியாயத்திற்காகவும், கடவுளுடைய ஞானம் தலைவர்களுக்குக் கொடுக்கப்படும் படியும் ஜெபியுங்கள்.

**வணிகம் மற்றும் வர்த்தகம்** - வர்த்தக மையங்களையும், வணிக வளாகங்களையும் பார்த்து ஜெபியுங்கள். நேர்மையான முதலீடுகளுக்காகவும் அவற்றை நல்ல முறையில் நிர்வகிக்கவும் ஜெபியுங்கள். நல்ல நிர்வாகத்திற்காகவும். பொருளாதார நீதி மற்றும் வாய்ப்பிற்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள். கடவுளுக்குத் தாராளமாக கொடுப்பவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**கல்வி** – பள்ளிகள், கல்வி மையங்கள், நிர்வாக கட்டிடங்கள், தொழிற்பயிற்சி மையங்கள், சமூக கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களைப் பார்த்து ஜெபம் செய்யுங்கள். நீதியுள்ள கல்வியாளர்கள் கடவுளுடைய சத்தியத்தைப் கற்பிப்பதற்கும், மாணவர்களின் பாதுகாப்பிற்க்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள். பொய்யையும் குழப்பத்தையும் வளர்க்க. எடுக்கும் முயற்சிகளை கடவுள் தலையிட்டுத் தடுக்க ஜெபியுங்கள். நல்ல குடிமகன்களை இந்த இடங்களிலிருந்து அனுப்ப ஜெபியுங்கள்.

**தகவல்தொடர்பு** - தகவல்தொடர்பு மையங்களான வானொலி நிலையங்கள், தொலைக்காட்சி நிலையங்கள் மற்றும் செய்தித்தாள் நிறுவனங்கள் ஆகியவற்றைப் பார்த்து ஜெபியுங்கள். . கடவுளுடைய கதையும் சீஷர்களின் சாட்சியும் நகரம் மற்றும் உலகம் முழுவதிலும் பரவ வேண்டும் என்பதற்காக ஜெபியுங்கள். அவரது செய்தி எல்லா தரப்பு மக்களையும் சென்றடைய ஜெபியுங்கள்.

**ஆன்மீகம்** – தேவாலயம் போன்ற ஆன்மீக மையங்களைப் பார்த்து பிரார்த்தனை செய்யவும்

இயேசுவில் சமாதானத்தையும் ஆறுதலையும் கண்டடையவும், குழப்பமடையாமலிருக்கவும் ஜெபியுங்கள்.

**குறிப்பு:** நீங்கள் போவதற்கு முன்பு B. L. E. S. S ஜெபத்தைக் கற்றுக் கொண்டு அதைப் பயிற்சி செய்ய மறவாதேயுங்கள்.

## B.L.E.S.S ஜெபம்

கடைசியாக, உங்கள் ஜெப நடையின் போது நீங்கள் சந்திக்கும் மக்களுக்காக ஜெபிக்க வேண்டிய ஐந்து வழிகள்:

நீங்கள் ஜெப நடை செல்லும் போது பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குச் சொல்லும் காரியத்திற்காக ஜெபியுங்கள். நீங்கள் சந்திக்கும் தனி நபர் அல்லது குழுவிற்காக ஜெபியுங்கள்.

இந்த சமூகத்திற்காக நாங்கள் ஜெபம் செய்கிறோம், குறிப்பாக எதற்காவது ஜெபம் செய்ய வேண்டுமா என்று கேளுங்கள். அல்லது, இப்பகுதிக்காக ஜெபிக்கிறோம். குறிப்பாக எதற்காகவாவது ஜெபிக்க வேண்டுமா என்று கேளுங்கள். அவர்களுடைய பதில்களைக் கேட்ட பிறகு நீங்கள் அவர்களுடைய தேவைகளைப் பற்றி கேட்கலாம். அவர்கள் பகிர்ந்து கொண்டால் உடனடியாக அவர்களுக்காக ஜெபியுங்கள். இறைவன் வழிநடத்தும்போது, மற்ற தேவைகளைப் பற்றி நீங்கள் ஜெபம் செய்யலாம்.

நீங்கள் ஜெபிக்க வேண்டிய 5 வெவ்வேறு வழிகளை நினைவில் வைத்திருக்க B.L.E.S.S என்ற வார்த்தை உதவும்:

- உடல் [சுகம்]
- தொழில் [வேலை மற்றும் நிதி]
- உணர்ச்சி [நல்வழி]
- சமூகம் [உறவுகள்]
- ஆன்மீகம் [கடவுளை அதிகம் தெரிந்து கொண்டு அவர் மேல் இன்னும் அதிகமாய் அன்பு செலுத்துவது]

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், நீங்கள் பிரார்த்தனைச் செய்யும் போது மக்கள் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார்கள்.

அந்த நபர் கிறிஸ்துவர் அல்லாதவர் என்றால், உங்கள் பிரார்த்தனை ஒரு ஆவிக்குரிய உரையாடலுக்கும் உங்கள் கதை மற்றும் கடவுளின் கதையைப் பகிர்ந்து கொள்ள கதவைத் திறந்து விடும் வாய்ப்பாக அமையும். உங்கள் வேத பாட வகுப்பிற்கு அவர்களை அழைக்கலாம்

அல்லது அவர்களுடைய வீட்டிலேயே ஒன்று துவங்கி நடத்தலாம்.

அந்த நபர் ஒரு கிறிஸ்துவர் என்றால் அவர்களை உங்கள் ஜெப நடைக்கு அழைத்து எப்படி ஜெப நடை செய்வது மற்றும் B.L.E.S.S போன்ற எளிய பயிற்சிகளை செய்வதற்கு கற்றுக் கொடுக்கலாம்.

**செயல் முறைகள்** [15 நிமிடம்]: இரண்டு அல்லது மூன்று குழுக்களாக பிரிந்து அடுத்த 15 நிமிடத்திற்கு B.L.E.S.S ஜெப முறையை பயிற்சி செய்க B.L.E.S.S-ன் ஐந்து வழிகளைப் பயிற்சி

செய்வதற்காக ஜெபம் செய்யுங்கள். மற்றவர்கள் இந்த முறைக்கு எப்படி பயிற்றுவிப்பது என்பதையும் பயிற்சி செய்யவும்.

# பகுதி 6

உண்மையாய் பின் தொடர்பவர்களை தேவன் எவ்வாறு உபயோகிக்கின்றார் என்பதை கற்றுக் கொள்வோம் – அவர்கள் புதிதாய் இருந்தாலும் – பல ஆண்டுகளாய் கற்றுக் கொண்டும் கீழ்ப்படியாதவர்களுக்கும் மேலாய். நாம் கூடி வருவது, சீஷர்கள் வேகமாய் பரவுவதற்கு எப்படி உதவுகிறது என்பதையும் பார்ப்போம்.

## 3/3 குழுக்கள்

இயேசு சொன்னார்: இரண்டு அல்லது மூன்று பேர் என் நாமத்தில் கூடிவரும் பொழுது அவர்கள் மத்தியில் நான் இருப்பேன்.

அது ஒரு வலிமையான வாக்குறுதி, இயேசுவை பின்பற்றும் ஒவ்வொருவரும் இதை பயன்படுத்தி கொள்ள வேண்டும். ஆனால் நீங்கள் ஒரு குழுவாக சேர்ந்து வரும்போது உங்கள் நேரத்தை எப்படி செலவிடுவது?

ஒரு 3/3 குழுவானது, தாங்கள் கூடி வரும் நேரத்தை 3 பாகங்களாக பிரிக்கிறது, அப்பொழுது இயேசு கட்டளையிட்ட சில மிக முக்கியமான காரியங்களுக்குக் கீழ்ப்படிந்து. அதைப் பயிற்சி செய்யலாம்.

இது எப்படி வேலை செய்கிறது?:

**திரும்பிப் பாருங்கள்** [1/3 பகுதி நேரம்]

**அக்கறையுடன் ஜெபம்:** ஒவ்வொருவரும் தாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கும் காரியங்களை பகிர்ந்து கொள்ள நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். பின்னர் ஒவ்வொருவரும் தாங்கள் போராடிக் கொண்டிருக்கிற சில காரியங்களை குறித்து பகிர்ந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு அடுத்து அமர்ந்திருக்கும் நபரிடம் இவைகளுக்காய் ஜெபிக்கும் படி கேளுங்கள். யாருக்காவது அதிக கவனம் தேவைப்பட்டால், கூட்டத்தின் முடிவில் அதிக நேரம் அவருடன் எடுத்துக் கொண்டு ஜெபியுங்கள்.

**தரிசனம்:** கடவுளை நேசிப்பது, மற்றவர்களை நேசிப்பது, மற்றவர்களுடன் இயேசுவைப் பகிர்ந்து கொள்வது, புதிய குழுக்களைத் துவக்குவது, மற்றவர்களுக்கு உதவுவது போன்ற கருத்துக்கள் அடங்கிய பாடல்களை பாடுங்கள். மேலும் இந்த கருப்பொருள்கள் அடங்கிய வேத பகுதிகளை யாராவது பகிர்ந்து கொள்ளட்டும்.

**சரிபார்த்தல்:** கடந்த வாரம் அவர்கள் செய்வோம் என்று ஒப்புக்கொண்ட காரியங்களை செய்தார்களா என்பதை சரிபார்க்கவும் முந்தைய வாரத்திலிருந்து:

1. நீங்கள் கற்றுக்கொண்டவைகளுக்கு எப்படி கீழ்ப்படிந்தீர்கள்?

2. நீங்கள் கற்றுக்கொண்டதில் யாருக்கு பயிற்சி கொடுத்தீர்கள்?
3. யாருடன் நீங்கள் உங்கள் கதையை அல்லது கடவுளின் கதையைப் பகிர்ந்து கொண்டீர்கள்?

அப்படி யாருக்காவது ஒப்புக் கொண்ட காரியங்களைச் செய்ய வாய்ப்பு இல்லையெனில் அவர்கள் அந்த காரியங்களை இந்த வாரத்திற்கான காரியங்களோடு இணைத்துக் கொள்ளுங்கள். அல்லது ஒருவர் இவைகளைச் செய்ய இணங்கவில்லையெனில் அதை ஒரு சபை ஒழுங்கு பிரச்சினையாக எடுத்துக் கொள்ளவும்.

**மேல் நோக்கி பார்த்தல்** [1/3 உங்கள் நேரம்]

**ஜெபம்**: கடவுளோடு சுருக்கமாக பேசவும். இந்த வசனத்தை உங்களுக்குக் கற்பிக்கக் கடவுளிடம் கேளுங்கள்.

**படிக்கவும் மற்றும் விவாதிக்கவும்**: இந்த வார பகுதியை படிக்கவும். பின்வரும் கேள்விகளைக் குறித்து விவாதிக்கவும்:

1. இந்த பகுதியில் நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்?
2. இந்த பகுதியில் நீங்கள் எதைப் புரிந்துகொள்வது கடினமானதென கண்டறிந்தீர்கள்?

மீண்டும் இந்த வார பகுதியைப் படிக்கவும்.

3. இந்த வசனங்களிலிருந்து மக்களைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?
4. இந்த வசனங்களிலிருந்து கடவுளைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?

**முன்நோக்கி பார்** [1/3 உங்கள் நேரம்]

**கீழ்ப்படி, பயிற்சி கொடு, பகிர்ந்து கொள்**: அமைதியாக குறைந்தபட்சம் ஐந்து நிமிடங்கள் ஜெபம் செய்யுங்கள். குழுவில் உள்ள அனைவருமே இந்த கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பதைக் காட்ட பரிசுத்த ஆவியானவரிடம் ஜெபியுங்கள், பிறகு ஒப்புக் கொடுங்கள்.

எல்லோரும் தாங்கள் செய்வதாக ஒப்புக் கொண்டதை எழுதி அதை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளவும். மற்றவர்கள் அதை அறிந்து உங்களுக்காக ஜெபம் செய்ய அது வசதியாக இருக்கும். ஒவ்வொரு கேள்வியையும் அவர்கள் ஒவ்வொரு வாரமும் கேட்க வேண்டிய அவசியம் இருக்காது.

அவர்கள் அதற்கு ஒரு பதிலைப் பகிர்ந்து கொள்ளும் போது அது தேவனிடமிருந்து பெறப்படாமல் அவர்களுடைய சொந்த யோசனையாக இருக்கும் பட்சத்தில், அதை அடுத்த நிலையில் உள்ளவர் நிதானிக்கலாம்.

5. இந்த பகுதியை எப்படி என் வாழ்வில் அப்பியாசப்படுத்துவது?
6. இந்த பகுதியை நான் எப்படி பயிற்றுவிப்பேன்?
7. என் கதை மற்றும் / கடவுளின் கதையை இந்த வாரம் யாரிடம் பகிர்ந்து கொள்ளவது?

**பயிற்சி**: இரண்டு அல்லது மூன்று குழுக்களாக பிரிந்து, கேள்வி 5, 6 அல்லது 7-ல் நீங்கள் ஒப்புக் கொண்ட காரியங்களைப் பயிற்சி செய்யுங்கள். உதாரணமாக, கஷ்டமான உரையாடல்கள், ஒரு சோதனையை எதிர்கொள்ளுதல்; இன்றைய பகுதியைக் கற்பித்தல், நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல்.

**தேவனுடன் பேசுங்கள்**: இரண்டு அல்லது மூன்று நபராக இருக்கும் அதே குழுவில், ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனியாக ஜெபம் செய்யுங்கள். இந்த வாரம் இயேசுவைப் பற்றிக் கேள்விப்படுகிற மக்களின் இதயத்தைத் தயார் செய்ய அவரிடம் கேளுங்கள். உங்கள் கடமைகளுக்குக் கீழ்ப்படிவதற்கு வலிமையும் ஞானமும் உங்களுக்குக் கொடுக்கும்படி. அவரிடம் கேளுங்கள். இதுவே இந்த கூட்டத்தின் முடிவு.

எல்லோரும் செய்து முடிந்த பிறகு, இராப்போஜனம் எடுங்கள் அல்லது ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணுங்கள்.


**குறிப்பு** - உங்களுடைய 3/3 குழுக்கள் வழிகாட்டிப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டவைகளைப் படிக்கலாம்.

## பகுதி 7

இந்தப் பகுதியில், சீஷர்களை ஒன்றிலிருந்து பலராகப் பெருக்கவும், ஒரு குறிக்கோளை இயக்கமாக மாற்றுவதற்கு தேவையான பயிற்சி முறையைப் பற்றியும் பார்க்கலாம். மேலும் 3/3 குழு மாதிரியைப் பயிற்சி செய்து, எப்படி நீங்கள் சந்திப்பது, பெருகுவதற்கு வழி வகுக்கும் என்பதையும் கற்றுக் கொள்ளலாம்.

### பயிற்சி முறை

இந்த பயிற்சி முறையானது, மாதிரி, உதவி, கவனி மற்றும் செல் என்ற நிலைகளைக் கொண்டது. அது இப்படியாக வேலை செய்கிறது.




**மாதிரி** - மாதிரி என்பது ஒரு உதாரணத்தைக் குறிக்கிறது. இது பயிற்சி முறையின் மிகக் குறுகிய பகுதி. இது ஒரு முறை மட்டுமே செய்யப்பட வேண்டும். பயிற்சி முறை எப்படி இருக்கும் என்பதைப் பற்றிய அறிவைக் கொடுக்கிறது. இது ஒருவரைத் தயார் படுத்துவதற்கு சிறந்த முறையன்று. அவர்களாகவே தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒருவர் மிதி வண்டி ஓட்டுவதை ஒரு குழந்தை பார்க்கும் பொழுது அது மாதிரி நிலை.

**உதவி/உதவு** – இது அவர்கள் பெற்றுக் கொண்ட திறனைப் பயிற்சி செய்ய அனுமதிக்கிறது. இந்த நிலை மாதிரியை விட அதிக காலம் எடுக்கிறது. கற்றுக் கொடுப்பவரின் உதவி

தேவையாயிருக்கிறது. கற்றுக் கொடுப்பவர் உத்தரவு பிறப்பிக்கிறார். முழுவதுமாக கற்றுக் கொள்ளும் வரை இந்த நிலை தொடருவதில்லை ஆனால் அடிப்படையான திறனைக் கற்றுக் கொள்ளும் வரை இந்த நிலையில் இருக்க வேண்டும். இந்த நிலையில் அதிக காலம் எடுத்துக் கொண்டால், கற்றுக் கொள்பவர், கற்றுக் கொடுப்பவரை அதிகமாய் சார்ந்து இருக்க வேண்டியிருக்கும். மற்றவர்களுக்கு மாதிரியாகும் பொழுது இந்த நிலை முடிவடையும்.

ஒரு குழந்தை சைக்கிள் கற்றுக் கொள்ளும் போது அதின் பெற்றோர் உதவி செய்வர். இதுவே உதவி நிலை.

**கவனி** – இந்த நிலை நீண்ட காலம் எடுக்கும். கற்றுக் கொள்பவருடன் மறைமுக தொடர்பே இருக்கும். உங்கள் முழு திறமையையும் இந்த நிலையில் வளர்த்துக் கொள்ள வேண்டும். முந்தைய நிலைகளை விட இந்த நிலை 10 மடங்கு அதிக நேரம் கூட எடுத்துக் கொள்ளலாம். அப்படி கற்றுக் கொள்பவர் தன் திறனை வளர்த்துக் கொண்டிருக்கும் போது, கற்றுக் கொடுப்பவருடனான தொடர்பு சிறிது சிறிதாக குறையும். இந்த நிலையில் கற்றுக் கொள்பவர் அதிக பொறுப்புகளை எடுத்துக் கொள்கிறார். அவருடைய செயல்பாட்டு திறனிலும் பல காரியங்களை முன்னெடுக்கிறார். கற்றுக் கொடுப்பவர் தன்னுடைய எல்லா திறனையும் மற்றவர்களுக்குக் கொடுக்கும் பொழுது இந்த நிலை நிறைவு பெறும்.

ஒரு குழந்தைக்கு சைக்கிள் ஓட்டுவதற்குத் தேவையான எல்லா திறமையும், அறிவும் இருக்கிறது என்று கணிக்கும் போது இந்த நிலை நிறைவு பெறுகிறது.

**செல்** – கற்றுக் கொடுப்பவருக்கு நிகராக வருவதே இந்த நிலை. தொடர்ந்து இருவருக்கும் இடையே உள்ள தொடர்பு நிலை நீடிக்கும்.

ஒரு பெற்றோர் தன் குழந்தையைத் தனியாக எந்த துணையும் இல்லாமல் சைக்கிள் ஓட்ட அனுமதிப்பதே இந்த நிலை.

## 3/3 குழு மாதிரியைப் பயிற்சி செய்க

செயல் முறைகள் [90 நிமிடம்] - உங்கள் மொத்த 3/3 குழுவும் 3/3 குழுக்கள் வடிவமைப்பு பக்கங்கள் 19-20 ஐ பயன்படுத்தி பயிற்சி செய்யவும்.

- பின்னால் திரும்பிப் பார்க்கவும் – சென்ற வார சவால்களைப் பயன்படுத்தி விசுவாசத்தைப் பயிற்சி செய்க.
- மேலே பார்க்கவும் - மாற்கு 5:1-20 ஐ பயன்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள 1 – 4 கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.
- முன்னோக்கி பார்க்கவும் – கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகள் 5, 6, மற்றும் 7 ஐ பயன்படுத்தி கீழ்ப்படிவதையும் பகிர்ந்து கொள்ளுவதையும் பயிற்சி செய்யுங்கள்.

நினைவில் கொள்ளுங்கள் - ஒவ்வொரு பிரிவும் உங்கள் பயிற்சி நேரத்தின் 1/3 [அல்லது 30 நிமிடங்கள்] எடுத்துக்கொள்ள வேண்டும்.

## பகுதி 8

இந்த பகுதியில், எப்படி தலைமைத்துவ குழுக்கள் குறைவான காலத்தில் தலைவர்களை உருவாக்குகிறார்கள் என்பதைப் பற்றி பார்ப்போம். இயேசு எப்படி மற்றவர்களுக்கு பணிவிடை செய்வதை தலைமைத்துவமாக மாற்றினார் என்பதைக் கற்றுக் கொள்வோம். சிறிது நேரம் எடுத்துக் கொண்டு 3/3 குழுவை பயிற்சி செய்வோம்.

## தலைமைத்துவ குழுக்கள்

தலைமைத்துவ குழுக்கள் 3/3 மாதிரியைப் பின்பற்றுபவை. அந்த குழுக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே கூடுபவை. இந்த குழுவின் குறிக்கோள் குழுவின் அங்கத்தினர்களுக்குப் பயிற்சி கொடுத்து அவர்களாகவே ஒரு குழுவை அமைப்பதற்கு ஊக்குவிப்பதாகும்.

பல சூழ்நிலைகளில் இந்த முறையைப் பின்பற்றலாம். நாடோடிகளுக்கும், மாணவர்களுக்கும் இந்த முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஏற்கனவே கிறிஸ்தவர்களாக இருப்பவர்களுக்கு இது பயன்படும் ஆனால் தாங்களாகவே ஒரு குழுவை ஆரம்பிப்பதற்கு அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். ஒரே சமயத்தில் அநேகர் கிறிஸ்துவிற்குள் வந்து, அவர்களைக் கவனிக்க முடியாத போதும் இந்த முறை அதிகம் பயன்படும்.

## 3/3 குழு மாதிரியை மீண்டும் பயிற்சி செய்க

செயல் முறைகள் [90 நிமிடம்] - உங்கள் மொத்த 3/3 குழுவும், 3/3 குழுக்கள் வடிவமைப்பு பக்கங்கள் 19-20 ஐ பயன்படுத்தி பயிற்சி செய்யவும்.

இந்த நேரத்தில்:

- பின்னால் திரும்பிப் பார்க்கவும் – சென்ற வார சவால்களை பயன்படுத்தி விசுவாசத்தைப் பயிற்சி செய்க.
- மேலே பார்க்கவும் - அப் 2:42-27 ஐ பயன்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள 1 – 4 கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.
- முன்னோக்கி பார்க்கவும் – கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகள் 5, 6, மற்றும் 7 ஐ பயன்படுத்தி கீழ்ப்படிவதையும் பகிர்ந்து கொள்ளுவதையும் பயிற்சி செய்யுங்கள்.

தலைமைத்துவத்தை சுழற்சி முறையில் பயிற்சி செய்க, ஏனென்றால் எல்லோருக்கும் கேள்வி கேட்கவும், ஜெபிக்கவும் வாய்ப்பு கிடைக்கும். எது நன்றாக உள்ளதோ, எதில் சிறிது பயிற்சி தேவையோ, இன்னும் அதிகமாக வளர்வதற்கு எது தேவையோ அதை உற்சாகப் படுத்துங்கள்.

**நினைவில் கொள்ளுங்கள்** - ஒவ்வொரு பிரிவும் உங்கள் பயிற்சி நேரத்தின் 1/3 [அல்லது 30 நிமிடங்கள்] எடுத்துக்கொள்ள வேண்டும்.

## பகுதி 9

இந்த அமர்வில், ஒரே விதமாக யோசிப்பது, எப்படி தேவ இராஜ்ஜியத்தின் வளர்ச்சியைப் பாதிக்கிறது என்றும் எப்படி பல்வேறு விதங்களில் சிந்திப்பது சீஷர்களைப் பெருக்குவதற்கு உதவுகிறது என்றும் பார்ப்போம். அதற்கு எவ்வளவு நேரம் ஆகும் மேலும் அதை எப்படி துரிதப்படுத்துவது என்றும் பார்ப்போம். எப்படி இயேசுவைப் பின்பற்றுபவர்கள் தங்கள் பட்டணத்தை மாற்றியமைக்க முடியும் என்பதையும் பார்ப்போம். கடைசியாக எப்படி ஒரு 3 மாத திட்டம் கடவுளுடைய குடும்பத்தை வளர்ப்பதற்கு உதவும் என்றும் பார்ப்போம்.

## 3-மாத திட்டம்

இப்பொழுது சில அடிப்படையான சீஷர்களை உருவாக்கும் முறைகளைக் கற்றுக் கொண்ட படியால் சிறிது நேரம் ஜெபத்தில் தரித்திருங்கள். அடுத்த 3 மாதத்திற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டுமென தேவனிடம் கேளுங்கள். அவருக்காய் சிறிது நேரம் காத்திருந்த பின் கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டத்தைப் பூர்த்தி செய்யுங்கள். உங்களுடைய திட்டத்தை உங்களின் பங்குதாரருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இன்றிலிருந்து 1,2,3,4,6,8 மற்றும் 12-வது வாரங்களில் சரிபார்ப்பதற்கு அவருடன் ஒரு திட்டமிடுங்கள்.

என் கதையையும் கடவுளின் கதையையும் பின்வரும் நபர்களுடன் பகிர்ந்து கொள்வேன்.

பின்வரும் மக்களை அழைத்து என்னுடன் ஒரு பொறுப்புக் குழுவைத் தொடங்க கேட்டுக் கொள்வேன்.

கீழ்க்காணும் மக்களை ஒரு பொறுப்பு குழுவைத் தொடங்குவதற்கும் பயிற்சியளிப்பதற்கும் ஊக்கப்படுத்துவேன்.

என்னுடன் பின்வரும் நபர்களை ஒரு 3/3 குழுவைத் தொடங்குவதற்கு அழைப்பேன்.

கீழ்காணும் நபர்களை ஒரு 3/3 குழுவைத் தொடங்குவதற்கும் பயிற்சியளிப்பதற்கும் ஊக்கப்படுத்துவேன்.

கீழ்காணும் நபர்களை ஒரு 3/3 நம்பிக்கை அல்லது கண்டுபிடிப்பு குழுவில் பங்கேற்க அழைப்பேன்.

பின்வரும் நபர்களை என்னுடன் ஜெப நடைக்கு அழைப்பேன்

பின்வரும் நபர்களுக்கு அவர்களின் கதை மற்றும் கடவுளின் கதையைச் சொல்வதற்கும் 100 பட்டியலை உருவாக்கவும் உதவி செய்வேன்.

பின்வரும் நபர்களைத் தொடர்ந்து ஜெப சைக்கிள் முறையை பயன்படுத்துவதற்குக் கேட்டுக் கொள்வேன்.

ஒவ்வொரு ________________ [நாட்கள் / வாரங்கள் / மாதங்கள்] - ல் பிரார்த்தனை சுழற்சி முறையை நான் பயன்படுத்துவேன்.

நான் ஒவ்வொரு ________________ [நாட்கள் / வாரங்கள் / மாதங்கள்] - ல் ஜெப நடை செல்வேன்.

நான் பின்வரும் மக்களை, வழி நடத்தும் ஒரு தலைமைத்துவ குழுவில் பங்கேற்க அழைப்பேன்.

நான் மக்களை இந்த சூம் பயிற்சியை எடுத்துக் கொள்ள ஊக்குவிப்பேன்.

பிற ஈடுபாடுகள்:

# மேல் நிலை பயிற்சி

## பகுதி 10

இந்த மேல் நிலை பயிற்சி வகுப்பிலே, ஒரு பட்டியலைக் கொண்டு பயிற்சியின் பலத்தை மதிப்பிடுவோம். மேலும் சிறிய சபைகளை இணைத்து இன்னும் அதிகமான குறிக்கோள்களை அடைவதற்கு எப்படி தலைமைத்துவம் உதவுகிறது என்பதைக் கற்றுக் கொள்வோம். சக கண்காணிக்கும் குழுக்கள் எப்படி அதன் தலைவர்களை உயரமான நிலையை அடையச் செய்கிறது என்பதையும் கற்றுக் கொள்வோம்.

### பயிற்சியளிப்பதை சரிபார்க்கும் பட்டியல்

இந்த பட்டியல் சீஷரை உருவாக்குவதில் உங்களுடைய பலம் மற்றும் பலவீனத்தை காட்டும் மிகச் சிறந்த கருவியாகும். மற்றவர்களுக்கு உதவுவதற்கும் இது மிகச் சிறந்த கருவியாகும் –மற்றவர்களும் உங்களுக்கும் உதவ பயன் படுத்தலாம்.

சுய மதிப்பீட்டை செய்ய இந்த விரைவான [5 நிமிடங்கள் அல்லது குறைவான] படிகளை பயன்படுத்தவும்:

- **படி 1** – சீஷர்களை உருவாக்கும் முறையில் கொடுக்கப்பட்டுள்ள பட்டியலின் இடது பக்கத்தில் உள்ளதை படிக்கவும்
    - **படி 2** – கீழ்ப்க்காணும் முறையைப் பயன்படுத்தி ஒவ்வொரு பயிற்சி முறையையும் குறிப்பிட்டு காட்டவும்.
- நீங்கள் அறிந்திருக்கவில்லை அல்லது கருவியைப் புரிந்து கொள்ளாவிட்டால் - கருப்பு பெட்டியில் டிக் செய்யவும்.
- உங்களுக்கு ஓரளவு தெரிந்திருந்திருக்கிறது ஆனாலும் அதைப் பற்றி உறுதியாக தெரியவில்லை என்றால் –சிவப்பு பெட்டியில் டிக் செய்யவும்
- உங்களுக்குத் தெரியும், மற்றவர்களுக்கும் பயிற்சி கொடுக்க முடியும் என்றால் – மஞ்சள் பெட்டியில் டிக் செய்யவும்
- உங்களுக்கு இந்த முறை நன்கு தெரியும் மற்றவர்களுக்கும் நன்றாகவே பயிற்சி கொடுக்க முடியும் என்றால் - பச்சைப் பெட்டியில் டிக் செய்யவும்

**நினைவில் கொள்க - உங்களின் பயிற்சி சரிபார்ப்பு பட்டியலை உங்கள் பயிற்சியாளர் மற்றும் / அல்லது உங்கள் பயிற்சி பங்குதாரரிடம் பகிர்ந்து கொள்ள மறந்து விடாதீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக பயிற்சியாளராக இருப்பீர்களானால் அவர்களுடன் இந்த பட்டியலைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

# பயிற்சியை சரிபார்க்கும் பட்டியல்

கருப்பு: புதிய தகவல்களுடன் பயிற்சி கொடு, புரிந்து கொள்ளுவதில் கவனம் செலுத்து

சிகப்பு: அவர்கள் அடிப்படையை கற்றுக் கொள்ளும் வரை அவர்களுடன் இருங்கள்.

மஞ்சள்: தொடர்ந்து தகுதியானவரை தேடுங்கள்.

பச்சை: அவர்களை விட்டு விட்டு, ஊக்குவிப்பதற்கு மற்றவர்களைத் தேடுங்கள்

| பயிற்சி முறைகள் | மாதிரி | உதவி செய் | கவனி | விட்டு செல் |
|---|---|---|---|---|
| | தெரியாது | திறனற்றவர் | தகுதியானவர் | திறமையானவர் |
| | வழிகாட்டுபவர் செய்வது | | | |
| | வழிகாட்டுபவர் தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் கொடுக்கிறார் | வழிகாட்டுபவர் உதவியையும் அறிவுறுத்தல்களையும் கொடுக்கிறார் | வழிகாட்டுபவர் உதவியையும் உத்வேகத்தையும் கொடுக்கிறார் | வழிகாட்டுபவர் மறு தகவல்களைப் பெற்றுக் கொள்கிறார் |
| | திட்டங்கள் எப்படி தயாரிக்கப்படுகிறது | | | |
| | வழிகாட்டுபவர் முடிவு செய்கிறார் | வழிகாட்டுபவர் உரையாடுகிறார் கேட்பவர் முடிவு செய்கிறார் | வழிகாட்டுபவர் /கேட்பவர் உரையாடுகிறார் கேட்பவர் முடிவு செய்கிறார் | உரையாடுபவர் முடிவு செய்கிறார் |
| வாத்து போன்ற சீஷத்துவம் | | | | |
| உங்கள் கதையைச் சொல்லுங்கள் [சாட்சி] | | | | |
| கடவுளின் கதையைச் சொல்லுங்கள் [சுவிஷேசம்] | | | | |
| உறவுகள் பட்டியல் 100 | | | | |
| வேகம் | | | | |
| பல வழிகளில் ஊழியம் | | | | |
| 3/3 மாதிரி குழு | | | | |
| எளிய சபை - தேவனையும் மற்றவர்களையும் நேசி, சீஷர்களை உருவாக்கு | | | | |
| இரண்டு சபைகளில் பங்கு கொள்வது | | | | |
| பயிற்சி சுழற்சி | | | | |
| பொறுப்பான குழுக்கள் | | | | |
| சுயமாக உட்கொள்ளுதல்: | | | | |
| • வேத வசனத்தை தினமும் வாசித்தல் [கீழ்ப்படி] | | | | |
| • ஜெபம் - பேசு & கவனி [ஜெப சுழற்சி] | | | | |
| • மாம்ச வாழ்க்கை – ஐக்கியம் [ஒருவருடன் ஒருவர்] | | | | |
| • சித்ரவதை & வேதனை | | | | |
| ராஜ்யம் எங்கே இல்லை என்று கண்கள் காணட்டும் | | | | |
| சமாதான நபரைக் கண்டறியுங்கள் [மத். 10, லூக்கா. 10] | | | | |
| ஜெப நடை | | | | |
| சபையாய் இருத்தல் | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| • ஐக்கியம் [ஒன்றாக சாப்பிடுதல், ஒருவருடன் ஒருவர்] | | | | |
| • துதி ஆராதனை | | | | |
| • வேதம் [கீழ்ப்படி, பயிற்சி செய்] | | | | |
| • இயேசுவைப் பற்றி கூறுதல் [பகிர்தல்] | | | | |
| • ஞானஸ்நானம் | | | | |

# கற்றுக் கொடுக்கும் குழுக்கள்

இயேசு சொன்னார் - "நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுக்கிறேன்: நான் உங்களை நேசித்தபடியே நீங்களும் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும். இதனால் என் சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்.

கற்றுக் கொடுக்கும் குழுவானது தலைமைத் தாங்குபவர்களையும் 3/3 குழுக்களைத் தொடங்கும் நபர்களையும் கொண்டது. இது 3/3 மாதிரி வடிவத்தைப் பின்பற்றுகிறது. தேவன் உங்களில் செய்யும் கிரியையை இந்த வடிவத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இந்த முறையில் தலைவருக்குத் தலைவர் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் தனிப்பட்ட நபராகவோ அல்லது ஒரு சிறிய சபையைச் சார்ந்தவராகவோ அல்லது ஒரு ஊழியத்தை சார்ந்தவராகவோ அல்லது ஒரு சபை குழுவைச் சார்ந்தவராகவோ இருக்கலாம்.

இந்த குழுவை சார்ந்தவர்கள் ஊழியத்தில் இயேசு சென்ற பாதையைத் தேர்ந்தெடுத்து அதில் செல்வார்கள். அவர்கள் கேள்வி கேட்பார்கள் மதிப்பீடும் செய்வார்கள். இந்த பகுதிகள் ஒருவரை குறைத்து மதிப்பிடவோ அல்லது அவர்களின் சுயமதிப்பைத் தூண்டுவதற்கோ இல்லை. அது சொல்லிக் கொடுப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமே.

இந்த எளிய வடிவத்தை உபயோகிக்கவும்

**திரும்பிப் பார்** [உங்கள் நேரத்தில் 1/3 அளவு]

மூன்றின் முதற் பகுதியிலே, ஒரு அடிப்படை 3/3 குழுவில் இருப்பது போன்று நினைத்துக் கொண்டு ஜெபம் செய்யுங்கள். பின்னர் குழுவின் தரிசனத்தையும், உண்மைத் தன்மையையும் முன்பு ஒப்புக் கொண்டவைகளையும் திரும்பிப் பார்ப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்.

நீங்கள் கிறிஸ்துவுக்கு எவ்வளவு கீழ்ப்படிகிறீர்கள்? [வசனம், ஜெபம், நம்பிக்கை, கீழ்ப்படிதல், முக்கிய உறவுகள்]

கடந்த கூட்டத்தில் எடுத்த நடவடிக்கை, திட்டங்களை உங்கள் குழு முடிக்கவில்லையா? அவர்களை மதிப்பாய்வு செய்யவும்.

**மேல் நோக்கி** பார்க்க [1/3 நேரம்]

பின்வரும் எளிய கேள்விகளைப் பற்றி உங்கள் குழுவை விவாதிக்கச் சொல்லுங்கள்

1. ஒவ்வொரு அமர்விலும் இந்த நான்கு கள அமைப்பில் எவ்வாறு செயல் படுகிறீர்கள்?
2. எது நன்றாக வேலை செய்கிறது? உங்களின் மிகப்பெரிய சவால்கள் என்ன?
3. உங்களின் தற்போதைய தலைமுறை வரைபடத்தை மதிப்பீடு செய்யவும்.
4. உங்களுக்கு சவாலாக இருந்தது எது அல்லது புரிந்து கொள்ள கடினமாக இருந்தது

என்ன?

5. சமீபத்தில் கடவுள் உங்களுக்கு என்ன காண்பிக்கிறார்?
6. அனுபவமுள்ள தலைவர்களிடமோ அல்லது மற்றவர்களிடமிருந்தோ ஏதாவது கேள்விகளைக் கேட்க வேண்டுமா?

**முன்னோக்கி பார்த்தல்** [உங்கள் நேரத்தில் 1/3 பகுதி]

எல்லோரும் அமைதியாக ஜெபத்தில் தரித்திருந்து கீழ்காணும் கேள்விகளுக்கு எப்படி விடை காண்பதென பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள்.

7. அடுத்த முறை நாம் கூடி வருவதற்கு முன்னர் எந்த செயல் திட்டத்திற்கு அல்லது இலக்கை பயிற்சி செய்ய தேவன் விரும்புகிறார்? [உங்கள் பணியை மையமாகக் கொள்ள உதவுவதற்காக நான்கு கள முறையைப் பயன்படுத்துங்கள்]
8. எப்படி எனக்கு வழிகாட்டுபவர் அல்லது என்னுடைய குழு உறுப்பினர்கள் எனக்கு உதவ முடியும்?


இறுதியாக ஜெபத்தில் குழுவாக தேவனோடு பேசுவதற்கு நேரத்தைச் செலவிடுங்கள்.

நீங்கள் பிரிந்து செல்லும் போது உங்கள் குழு சென்றடையும் ஒவ்வொருவரின் மனதையும் ஆண்டவர் தயார் செய்யும் படி, குழுவில் உள்ள ஒவ்வொருவரும் தேவனிடம் ஜெபம் செய்ய வேண்டும்.

இந்த அமர்வில் தேவன் உங்களுக்குக் கற்பித்த எல்லாவற்றுக்கும் கீழ்ப்படிய தேவையான பெலத்தையும் கீழ்ப்படிதலையும் தருவதற்காய் தேவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள். ஒரு இளைய தலைவருக்காய் ஜெபிக்க, ஒரு மூத்த தலைவருக்கு இதுவே சரியான தருணம்.

இந்த குழுக்கள் பெரும்பாலும் தூரத்தில் சந்திப்பதால், நீங்கள் கொண்டாடுவதற்கு இதுவே தருணம். இராப்போஜனம் அல்லது உணவைப் பகிர்ந்து கொள்ளலாம், ஆனால் உடல்நலம், குடும்பம் மற்றும் நண்பர்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

## நான்கு கள வரைபடம்





**களத்தைப் பெருக்குவது**: யாருடன், எப்படி, எப்போது நீங்கள் உண்மையுள்ள மக்களைப் பிரித்து அவர்கள் பெருகுவதற்கு பொறுப்பாளராக்குகிறீர்கள்?

**வெறுமையான களம்/நிலம்**: எங்கே அல்லது யாருடன் [எந்த குழுவினருடன்] தேவ இராஜ்ஜியத்தை விரிவுபடுத்த திட்டமிடுகிறீர்கள்?


**விதைக்கும் களம்/நிலம்**: எங்கே அல்லது யாருடன் தேவ இராஜ்ஜியத்தின் நற்செய்தியை பகிர்ந்து கொள்ளுகிறீர்கள்? எப்படி அதை செய்கிறீர்கள்?

**வளரும் களம் / நிலம்**: ஆவியில் வளர்வதற்கு எப்படி மக்களைத் தயார்படுத்துகிறீர்கள்?

# தலைமுறை வரைபடத்தில் எளிய சபையை குறிக்கும் முறை




குழு தலைவரின் பெயர்




இடம்/ஆரம்பிக்கும் தேதி

# பின் இணைப்பு

## 3/3 குழு தொடர்

**நம்பிக்கை தொடர் [தேடுபவர்களுக்கு]**

உங்கள் குழுவின் "மேல் நோக்கிப் பார்" பகுதிக்கு கீழ்காணும் வரிகளைப் பயன்படுத்துங்கள். சில வரிகளுக்கு, உங்கள் குழு ஒரு முறைக்கு மேல் கூட வேண்டிய அவசியம் வரலாம்.

1. பாவிகளுக்கு நம்பிக்கை: லூக்கா 18:9-14
2. ஏழைகளுக்கு நம்பிக்கை: லூக்கா 12:13-34
3. ஓடிப்போனவர்களுக்கு நம்பிக்கை: லூக்கா 15:11-32
4. தொலைந்து போனவர்களுக்கு நம்பிக்கை: லூக்கா 19:1 -10
5. துக்கத்திலுள்ளவர்களுக்கு நம்பிக்கை: யோவான் 11:1-44
6. தேடுபவர்களுக்கு நம்பிக்கை: யோவான் 3:1-21

---

**யோவானின் குறியீடுகள் [தேடுபவர்களுக்கு]**

உங்கள் குழுவின் "மேல் நோக்கிப் பார்" பகுதிக்கு கீழ்காணும் வரிகளைப் பயன்படுத்துங்கள். சில வரிகளுக்கு, உங்கள் குழு ஒரு முறைக்கு மேல் கூட வேண்டிய அவசியம் வரலாம்.

1. தண்ணீரை திராட்சரசமாக மாற்றுதல் யோவான் 2:1-12
2. அரச அதிகாரி மகன் சுகமடைதல்: யோவான் 4:46-54
3. நோயுற்றவரைக் குணமாக்குதல்: யோவான் 5:1-17
4. ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்: யோவான் 6:1-14
5. தண்ணீரின் மேல் நடத்தல்: யோவான் 6:15-25
6. பிறவிக் குருடனாயிருக்கிற மனுஷனைக் குணமாக்குதல் யோவான் 9:1-41
7. லாசருவை மரித்தோரிலிருந்து எழுப்புதல்: யோவான் 11:1-46

---

**உங்கள் பாதையைத் தொடங்குங்கள்: முதல் 8 கூட்டங்கள்**

இது ஏற்கனவே கிறிஸ்துவர்களாக உள்ள ஆனால் இது போன்ற குழுவில் முன்பு இல்லாதவர்களுக்கு உகந்தது. பயிற்சி பகுதிகள் இந்த 8 அமர்வுகளுக்கும் பொதுவானவை. தனிப்பட்ட பயிற்சிகள் அடுத்து வரும் கூட்டங்களில் தொடங்குகிறது.

1. உங்கள் கதையைக் கூறுங்கள்

மேல் நோக்கு: மாற்கு 5: 1-20. வசனங்கள், 18-20 ஐ கவனிக்க.

பயிற்சி செய்: உங்கள் கதையைச் சொல்லி பயிற்சி செய்க. இயேசுவைப் பற்றி சொல்லும் பொழுது உங்கள் கதையையும் சொல்வதற்கு தயாராய் இருக்க வேண்டும். இப்படி உங்கள்

கதையை சொல்லலாம்:

- இயேசுவைப் பின்பற்றுவதற்கு முன் உங்கள் வாழ்க்கை எப்படி இருந்தது என்பதைப் பற்றி பேசுங்கள். உங்கள் உணர்வுகள் [வலி, தனிமை], கேள்விகள் [மரணத்தின் பின் என்ன நடக்கும்?], இயேசுவைப் பின்பற்றுவதற்கு முன்பு இருந்த போராட்டங்கள் ஆகியவற்றைக் குறித்து பேசுங்கள்.
- நீங்கள் எப்படி இயேசுவைப் பின்பற்றுபவரானீர்கள் என்பதைப் பற்றிப் பேசுங்கள். -இயேசுவைப் பற்றி அவர்களிடம் சொல்லுங்கள்! இயேசுவின் அத்தியாவசிய கதை: நாம் எல்லோரும் தேவனுக்கு எதிராக பாவம் செய்தோம். நம்முடைய பாவங்களினாலே நாம் மரணமடைவோம்.
- ஆனால் நாம் இயேசுவில் விசுவாசம் வைக்கும்போது மரணத்திலிருந்து இரட்சிக்கப்படுகிறோம்.
- நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்தார், ஆனாலும் மரித்தோரிலிருந்து மீண்டும் உயிரோடெழுந்தார்.
- இயேசுவைப் பின்பற்றிய பிறகு உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி பேசுங்கள்-இயேசு உங்கள் வாழ்க்கையை மாற்றியது பற்றி அவர்களிடம் சொல்லுங்கள். மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் மற்றும் இயேசு கொடுத்த மன்னிப்பையும் பற்றி சொல்லுங்கள்.
- பதில் கூற கேளுங்கள் - உங்கள் கதை ஒரு பதிலை எதிர் பார்க்க வேண்டும். ஒருவருடைய ஆவிக்குரிய வாஞ்சையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு சில கேள்விகள் கேளுங்கள். இது போன்ற கேள்வி கேட்கலாம். நீங்கள் எப்படி மன்னிக்கப்படுவீர்கள் என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? அல்லது தேவன் உங்கள் வாழ்க்கையை மாற்ற விரும்புகிறீர்களா?
- சுருக்கவும் – உங்கள் கதை சுருக்கமாகவும் சுவையாகவும் இருக்க வேண்டும். அது பிறருக்கு கவனச் சிதைவை ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது. நீளமானதாக இருந்தால் கேட்பவரின் ஆர்வம் குறைந்து விடும்.
- உங்கள் குழுவில் இருப்பவருடன் உங்கள் கதையைச் சொல்வதற்கு பயிற்சி செய்யவும்.
- சொல்வதற்கு 5 பேரைத் தெரிந்து கொள்ளவும். ஜெபிக்கவும். தங்கள் கதையை சொல்ல வேண்டிய அந்த ஐந்து பேரைக் காட்டும் படி தேவனிடம் கேளுங்கள்.

2. இயேசுவின் கதையைச் சொல்லவும்.

மேல் நோக்கி பார்: 1 கொரிந்தியர் 15:1-8, ரோமர் 3:23, ரோமர் 6:23

பயிற்சி: உங்கள் குழுவில் உள்ள அனைவருக்கும் எளிய முறையைப் பயன்படுத்தி இயேசுவின் கதையைச் சொல்ல பயிற்சி கொடுங்கள். 5 பேருக்கு உங்கள் கதையையும் இயேசுவின் கதையையும் இந்த வாரம் சொல்லுங்கள். ஒவ்வொரு வாரமும் இதைச் செய்யுங்கள்.

---

3. பின்பற்று & பிடி

பார்க்க: மாற்கு 1:16-20

பயிற்சி: ஒரு பட்டியல் தயார் செய்யுங்கள். ஒரு வெள்ளைத்தாளில் உங்களுக்குத் தெரிந்த, இயேசுவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய 100 பேரின் பெயர்களை எழுதுங்கள். [குடும்பம், நண்பர்கள், அயலகத்தார், உடன் பணியாற்றுபவர் மற்றும் பள்ளிக்கூட நண்பர்கள்]. 5 பேருக்கு உங்கள் கதையையும் இயேசுவின் கதையையும் இந்த வாரம் சொல்லுங்கள். ஒவ்வொரு வாரமும் இதைச் செய்யுங்கள்.

---

**4.** ஞானஸ்நானம்

பார்க்க: ரோமர் 6:3-4 அப் 8: 26-40

பயிற்சி செய்: அருகாமையில் எங்கு தண்ணீர் இருக்கிறது என்று கண்டறியுங்கள்.[குளிக்கும் தொட்டி, குளம், ஆறு, ஏரி]. புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும். விசுவாசியான உடனே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும். ஞானஸ்நானம் பற்றி இன்னும் அதிகமாக தெரிந்து கொள்ள கீழ்காணும் வசனங்களை படிக்கவும். அப் 2:37-41; 8:5-13; 8:36-38; 9:10-19; 10:47-48; 16:13-15; 16:27-34; 18:5-9; 19:1-5; 22:14-17 1 கொரி 1:10-17

உங்கள் கதையையும் இயேசுவின் கதையையும் இந்த வாரம் 5 பேரிடம் கூறவும். ஒவ்வொரு வாரமும் இப்படிச் செய்யவும்

---

5. வேதம்

பார்க்க: 2 தீமோத்தேயு 3:14-16

பயிற்சி: 7 வேத வினாக்களை மனனம் செய்து ஒப்பிக்கவும். [எளிய கூட்ட வரைமுறையில் உள்ள 1 – 7 வரையிலான கேள்விகள்]. உங்கள் கதையையும் இயேசுவின் கதையையும் இந்த வாரம் சொல்லுங்கள். ஒவ்வொரு வாரமும் இதைச் செய்யுங்கள்.

---

5. தேவனிடம் பேசுங்கள்:

பார்க்க: மத்தேயு 6: 9-13

பயிற்சி: ஜெப வழி முறையைப் பயன்படுத்தி எப்படி தேவனிடம் பேசுவது என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள். அதைப் பயன்படுத்தி மத்தேயு 6:9-13-ல் கொடுக்கப்பட்டுள்ள இயேசுவின் ஜெபத்தை செய்யுங்கள்.

1. உள்ளங்கை = எப்படி உள்ளங்கை ஐந்து விரல்களுக்கும் அஸ்திபாரமாக இருக்கிறதோ அதே போல் அவரோடு நேரம் செலவழிப்பதும் அவரோடு உள்ள உறவிற்கு அஸ்திபாரமாக இருக்கிறது. "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே..." [மத்தேயு 6: 9]
2. பெருவிரல் = ஆராதனை. நாம் எதையும் கேட்பதற்கு முன் தேவனை ஆராதிக்க வேண்டும். “உம்முடைய நாமம் பரிசுத்த படுவதாக…” [மத்தேயு 6:9]
3. ஆள்காட்டி விரல் = ஒப்புவி. அடுத்து நம்முடைய வாழ்க்கை, திட்டங்கள், குடும்பம், பெருளாதாரம், வேலை, எதிர்காலம் மற்றும் எல்லாவற்றையும் ஒப்புவிப்போம். “உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக…” [மத் 6:10]
4. நடு விரல் = கேள். தேவன் நம்முடைய தேவைகளைச் சந்திக்க அவரிடம் கேளுங்கள். “எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்” [மத்தேயு 6:11]
5. நான்காவது விரல் = மன்னிப்பு. இப்போது நம் பாவங்களை மன்னிப்பதற்காக தேவனிடம் வேண்டிக் கொள்வோம். நாமும் மற்றவர்களை மன்னிக்க வேண்டும். "நாங்கள் மற்றவர்களை மன்னிக்கிறபடி எங்களையும் மன்னியும்." [மத்தேயு 6:12]. உங்கள் குழு ஒரு சிறிய சபையாக மாறினால் ஒரு வட்டத்தை வரையவும். கீழே உள்ளவற்றை வழக்கமாக பின்பற்றி வந்தால் அவற்றை அந்த வட்டத்திற்குள் வரைக. நீங்கள் அதைச் செய்யவில்லையென்றால் வட்டத்திற்கு வெளியே வரையுங்கள்.
6. சுண்டு விரல் = பாதுகாப்பு. பிறகு பாதுகாப்பைக் கேட்போம். “எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையினின்று எங்களை விலக்கிக் காத்துக் கொள்ளும்.” [மத்தேயு 6: 9]
7. கட்டை விரல்[மறுபடியும்] = ஆராதனை. நாம் ஆரம்பித்தது போலவே முடிப்போம் – சர்வவல்லமையுள்ள தேவனை நாம் ஆராதிக்கிறோம். “இராஜ்ஜியமும் வல்லமையும், மகிமையும் உம்முடையவைகளே. ஆமென்” [மத்தேயு 6:13].

உங்கள் கதை மற்றும் இயேசுவின் கதையை 5 நபர்களுக்கு இந்த வாரம் சொல்லுங்கள். ஒவ்வொரு வாரமும் இதைச் செய்யுங்கள்.

7. கடினமான நேரம்:


பார்க்க: அப் 5:17 – 18 மத் 5:43 – 44

பயிற்சி: இந்த புதிய விசுவாசத்தினால் நீங்கள் சந்தித்த கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். சந்திக்கப் போகும் பிரச்சனைகளையும் எண்ணிக் கொள்ளுங்கள். அதற்கு எப்படி பதில் செய்வீர்கள் என்பதையும் கூறுங்கள் – தைரியமாகவும், அன்போடும் – இயேசு சொல்லிக் கொடுத்ததைப் போல. உங்கள் தேவைகளுக்காய் ஜெபியுங்கள். ஒவ்வொருவரும் பகிர்ந்து கொண்ட பிறகு அவர்களுக்காய் ஜெபம் செய்யுங்கள். உங்கள் கதை மற்றும் இயேசுவின் கதையை 5 நபர்களுக்கு இந்த வாரம் சொல்லுங்கள். ஒவ்வொரு வாரமும் இதைச் செய்யுங்கள்.


8. தேவாலயம்

பார்க்க: அப்போஸ்தலர் 2: 42-47, 1 கொரிந்தியர் 11: 23- 34

பயிற்சி: உங்கள் குழு ஒரு சபையாக மாற என்ன செய்ய வேண்டும் என்பதை விவாதியுங்கள். ஒரு குழுவாய் ஒரு வெற்று காகிதத்தில் ஒரு வட்டம் வரைக. அதன் மேல் இந்த 3 எண்களை குறிக்கவும். எப்போதும் வருபவர்கள், இயேசுவை விசுவாசிப்பவர்கள், ஞானஸ்நானம் பெற்றவர்கள். விசுவாசித்த பின் ஞானஸ் நானம் பெற்றவர் எண்ணிக்கை [தண்ணீர்]



உங்கள் குழு சபையாக கூடி வருமேயானால், புள்ளிகளை இணைத்துக் கோடிடவும். கீழ்காண்பவற்றை நீங்கள் வழக்கமாக பயிற்சி செய்வீர்களேயானால், கீழே காணும் வட்டத்திற்குள் இருக்கும் படங்களை வரையவும். வெளியிலிருந்து வருபவர் வந்து செய்ய வேண்டுமென்று காத்திருப்பீர்களேயானால், வட்டத்திற்கு வெளியே வரையவும்.



1. தேவாலயம் மாற உறுதி: புள்ளியிட்ட வரிக்கு பதிலாக வரி.
2. ஞானஸ்நானம் - தண்ணீர்
3. பைபிள் - புத்தகம்
4. ரொட்டி மற்றும் நீருடன் இயேசுவை நினைவு கூர்தல் - கப்
5. ஐக்கியம் - இருதயம்
6. கொடுப்பது மற்றும் ஊழியம் - பண அடையாளம்
7. ஜெபம் - ஜெப கைகளில்
8. துதி - உயர்த்தப்பட்ட கைகளில்
9. இயேசுவைப் பற்றி சொல்லும் மக்கள் – விசுவாசத்திற்கு நேராய் தான் வழி நடத்திய தன் நண்பனின் கரத்தைப் பிடித்திருப்பவர்
10. அவர் விசுவாசத்திற்கு நேராய் நடத்தினார்
11. தலைவர்கள் - இரண்டு புன்னகை முகங்கள்

ஒரு ஆரோக்கியமான சபையை நிறுவ இன்னும் எது தடையாய் இருக்கிறது?

உங்கள் கதை மற்றும் இயேசுவின் கதையை 5 நபர்களுக்கு இந்த வாரம் சொல்லுங்கள். ஒவ்வொரு வாரமும் இதைச் செய்யுங்கள்.

---

அடுத்தது என்ன?

3/3 கண்டறிதல் அல்லது 3/3 தேற்றுதல் புத்தகங்களை அல்லது யோவான் அல்லது மாற்கு [ஒரு புத்தகத்தை மாத்திரம் தேர்வு செய்யுங்கள்] புத்தகத்தைப் படியுங்கள்.

---

கண்டறியும் தொடர்
[வேத பின்னணி மற்றும் பரிச்சயம் தேவைப்படும் குழுக்களுக்கு]

"பார்க்க" பகுதிகளுக்கு பின்வரும் பகுதிகளைப் பயன்படுத்தவும்

உங்கள் குழுவிற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சந்திப்பு தேவைப்படலாம்.

---

**தேவனைக் கண்டுபிடி** - யார் தேவன் அவர் எப்படி இருப்பார்:

1. சிருஷ்டிப்பு - ஆதியாகமம் 1
2. மனிதனை படைத்தல் - ஆதியாகமம் 2
3. மனிதனின் கீழ்ப்படியாமை - ஆதியாகமம் 3
4. நோவா மற்றும் வெள்ளம் - ஆதியாகமம் 6 5-8:14
5. நோவாவிற்கு கடவுளின் வாக்குத்தத்தம் - ஆதியாகமம் 8:15 - 9:17
6. தேவன் ஆபிரகாமிடம் பேசினது - ஆதியாகமம் 12: 1-7; 15:1-6
7. ஆபிரகாமின் சந்ததிக்கு தாவீது ராஜாவாகிறார்
8. தாவீது ராஜாவும் பத்சேபாளும் - 2 சாமுவேல் 11:1-27
9. நாத்தானின் கதை - 2 சாமுவேல் 12:1-25
10. இரட்சகர் வருவார் என்ற தேவனின் வாக்குத்தத்தம் - ஏசாயா 53

**இயேசுவைக் கண்டறிதல்** - யார் இந்த இயேசு மற்றும் அவர் ஏன் வந்தார்?

1. இரட்சகராக பிறந்தார் - மத்தேயு 1:18-25
2. இயேசுவின் ஞானஸ்நானம் - மத்தேயு 3:7-9, 13-15
3. பிசாசு பிடித்திருந்தவனைக் குணமாக்குதல் - மார்க் 5:1-20
4. இயேசு தன் ஆடுகளை இழந்து போவதில்லை - யோவான் 10:1-30
5. இயேசு குருடனைக் குணமாக்குகிறார் - லூக்கா 18:31-42
6. இயேசுவும் சகேயுவும் - லூக்கா 19:1-9
7. இயேசுவும் மத்தேயுவும் - மத்தேயு 9:9-13
8. இயேசுவே வழி - ஜான் 14:1-15
9. பரிசுத்த ஆவியானவர் வருகிறார் - யோவான் 16:5-15
10. கடைசியான உணவு - லூக்கா 22:14-20
11. கைதுசெய்யப்படுதல் மற்றும் விசாரணை - லூக்கா 22: 47-53; 23: 13-24
12. நிறைவேற்றுதல் - லூக்கா 23:33-56
13. இயேசு உயிரோடு இருக்கிறார் - லூக்கா 24:1-7, 36-47; அப்போஸ்தலர் 1:11
14. விசுவாசிப்பது செயல் படுவது – பிலி 3:3-9

---

**பலப்படுத்தும் தொடர்**

[புதிய விசுவாசிகளுக்கும் ஒழுங்கு முறையில் கவனம் செலுத்த வேண்டிய குழுக்களுக்கும்]

**இயேசு சொன்னார்** – இயேசுவின் அடிப்படை கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுங்கள். உங்கள் பட்டியலில் உள்ள மக்களுடன் இயேசுவைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

1.1 கற்றுக்கொள்ளுங்கள், செய்யுங்கள்-யோவான் 14:15-21!

1.2 மனந்திரும்புங்கள். நம்புங்கள். பின்பற்றுங்கள். - மாற்கு 1:14-17, எபேசியர் 2:1-10

1.3 ஞானஸ்நானம் பெறுங்கள்-மத்தேயு 28:19, அப்போஸ்தலர் 8:26-38

1.4 தேவனை நேசியுங்கள். மக்களிடம் அன்பு கூறுங்கள் - லூக்கா 10:25-37

---

மேலும் இயேசு சொன்னார் - இயேசுவின் அடிப்படை கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுங்கள். உங்கள் பட்டியலில் உள்ள மக்களுடன் இயேசுவைப் பகிர்ந்து கொள்ளுங்கள்

2.1 கடவுளுடன் பேசுங்கள் - மத்தேயு 6:9-13. இயேசுவின் மாதிரி ஜெபத்தை அறிந்து பயிற்சி செய்க.

2.2 நினைவில் கொள்க இயேசுவைக் கொண்டாடுங்கள் - லூக்கா 22:14-20, 1 கொரிந்தியர் 11:23-32

2.3 கொடுங்கள் - அப் 4:32-37

2.4 கொண்டு செல்லுங்கள் - மத்தேயு 28:18-20

---

நான் பின்பற்றுவது போல் பின்பற்றுங்கள் - சீடர்களை உருவாக்குங்கள். நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களை மற்றவர்களிடம் கொண்டு செல்லவும். அவர்களும் அதை எடுத்துச் செல்ல கற்பியுங்கள்.

3.1 சீஷரைக் கண்டறியுங்கள் - 2 தீமோத்தேயு 1:1 – 14

3.2 எடுத்துச் செல்லுங்கள் - 2 தீமோத்தேயு 1-4, 14-16

3.3 மற்றவர்களுக்குக் கற்பிக்க அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள் - 2 தீமோத்தேயு 1-17

3.4 கஷ்டமான நேரங்கள் - 2 தீமோத்தேயு 4:1-22

---

உங்கள் 3/3 குழுவைப் பெருக்குங்கள் – உங்கள் புதிய சீஷர்களை புதிய குழுவாக சேருங்கள்

4.1 ஆரம்பிக்கவும், ஒரு திட்டத்தை உருவாக்கவும் லூக்கா 10:1-11. ஒரு புதிய குழுவை ஆரம்பிக்கும்போது இயேசுவின் அறிவுரைகளைக் கேளுங்கள்

4.2 உடன் கூடி - அப்போஸ்தலர் 2:14-47

4.3 சமாதான நபர் - மாற்கு 5:1-20, 6:53-56. இயேசுவின் கதையைப் பகிர்ந்துகொள்ள விரும்பும் மக்களைக் கண்டறியுங்கள் அந்த நபர் மற்றும் அவர்களது நண்பர்கள் மற்றும் குடும்பத்துடன் ஒரு குழுவைத் தொடங்கவும்

4.4 யார் தயாராக இருக்கிறார்கள் - மத்தேயு 13:1-9, 18-23

---

வழி நடத்து – 3/3 குழுவை எப்படி வழி நடத்துவது என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள்.

5.1 மாதிரி [இது போல் வழி நடத்தவும்] யோவான் 1:13-17
5.2 மாதிரி [இது போல் வழி நடத்த வேண்டாம்] 3 யோவான் 5:14
5.3 உதவு – மாற்கு 4:35-41
5.4 கவனி – லூக்கா 10:1-11, 17, 20
5.5 செல் – மத்தேயு 25:14-30

---

செல்: உள்ளூர் – உள்ளூர் மக்களை எவ்வாறு சென்றடையலாம் என்பதைக் கண்டறியுங்கள்.

6.1 செல்: உள்ளூர் - அப்போஸ்தலர் 1:1-8
6.2 ஏழைகளுக்கு உதவி செய். நற்செய்தியைப் பகிர்ந்து கொள் - லூக்கா 7:11-23
6.3 கடவுள் எங்கே அனுப்புகிறாரோ அங்கே செல் - அப் 9-48
6.4 ஒரு திட்டத்துடன் செல் - அப்போஸ்தலர் 13 செல்:1-3, 32-33, 38-39; 4:21-23, 26-27

---

உலகமெங்கும் செல்- உலகமெங்கும் எப்படி செல்வதென்பதைக் கண்டறியுங்கள்

7.1 செல்: உலகளாவிய - அப்போஸ்தலர் 1:1-8, மத்தேயு 28:19-20
7.2 தேவன் அனுப்பும் இடத்திற்குச் செல்லுங்கள்-அப்போஸ்தலர் 8:26-38
7.3 கடவுள் எல்லா ஜனங்களின் மேலும் அன்பு செலுத்துகிறார்- யோவான் 4:4-30, 39-41
7.4 ஒரு திட்டத்துடன் செல் - அப்போஸ்தலர் 13:1-3, 32-33, 38-39; 14:21-23,26-27

---

அடிப்படைக் காரியங்களை நினைவில் கொள்க - நீங்கள் சந்திக்கும் போது என்ன செய்ய வேண்டும் என்பதைக் கண்டறியுங்கள்.

8.1 முதலாவது இயேசு - பிலிப்பியர் 2:1-11
8.2 தேவனிடம் பேசுங்கள் - மத்தேயு 6:9-13
8.3 சமூகம் எபிரெயர் 10:23-25
8.4 பைபிள் - 2 தீமோத்தேயு 3:10-17

---

ஒப்புவி - எப்படி உறுதியாய் இருப்பது என்பதையும் எப்படித் தொடர்ந்து இயேசுவைப் பின்பற்றுவது என்பதையும் கண்டறியுங்கள்.

9.1 கீழ்ப்படியாமை - யோனா 1
9.2 ஒப்புவி – யோனா 2
9.3 கீழ்ப்படி – யோனா 3
9.4 எல்லா வழிகளிலும் கீழ்ப்படி – யோனா 4
9.5 உபயோகி அல்லது விட்டு விடு – மத் 25:14-30

அடுத்தது என்ன?
வேதத்திலிருந்து நீங்களே ஏதாவதொரு பகுதியைத் தெரிந்து கொண்டு தொடர்ந்து கூடி வாசியுங்கள். மேலே கொடுக்கப்பட்ட கேள்விகளையும், குழு மாதிரியையும் உபயோகியுங்கள். கூடி வருவதை விட்டு விடாதிருங்கள்.

சீஷர்களை பெருக்குதல்